திராவிடநாடு

27—5—62 | வார வெளியீடு | விலை 16 காசு

உயர்வு எங்கே?

சா. சதாசிவம்

கடல்நீரைக் குடித்துவிட்டு இனிமை என்றால்
காண்பவர்கள் கேட்பவர்கள் நகைப்பார்! நல்ல
சுடர்விளக்கின் ஒளிகண்டு இருட்டு என்றால்
சுடுநெருப்பைத் தீண்டிவிட்டுத் தென்றல் என்றால்
படித்தவர்கள் பாமரர்கள் அனைவருக்கும்
பிறக்காதோ சந்தேகம்? அதுபோல் இங்கே
கொடுமுடியின் சிகரம்போல் உயர்ந்து நாளும்
கொல்லுகின்ற விலையேற்றம் வளரும் போது,

விலைவாசி சமநிலையில் இருக்குதென்று
வீராப்புப் பேசுகின்றார் நிலையை எண்ணிக்
கலங்குவதா? கழிவிரக்கம் கொள்வதாமோ?
கவர்னரல்ல வதைகின்ற ஏழை மக்கள்!
உலையிலிட அரசியின்றி உடுத்துதற்கு
உயர்மானம் காக்கின்ற ஆடை இன்றி
அலையிடையே படகாக அலைபவர்கள்
அமைச்சருரை முழுச்சோற்றில் பூசணிக்காய்,

என்பதன்றி வேறென்ன சொல்வார்? நாளும்
ஏழ்மைநிலை வளர்கின்ற காட்சி கண்டும்
முன்னேற்றம் என்றுபுள்ளி விவரஞ் சொன்னால்
மூண்டுவிட்ட வறுமைநிலை இருக்கலாமோ?
கனவான்கள் நிலைமட்டும் உயரக் கண்டோம்
கள்ளமார்க்கெட் கொள்ளைமட்டும் உயரக் கண்டோம்
தினந்தினமும் உயர்கின்ற விலையேற்றத்தால்
திருவோடு மட்டுந்தான் வளர்த்து விட்டால்!

ஜூடித் மின்ட் சென்தி

—(கனகு)—

"**க**ம்யூனிஸ்டு டாங்கிப்படை என் வழியில் குறுக்கிட்டது. என் சேயிடமிருந்து என்னைப் பிரித்து நிறுத்தியது" என்று தன் கதையைக் சொல்லத் தொடங்குகிருள் அங்கேரி நாட்டு அன்னையொருத்தி—ஜூடித் மின்ட் சென்தி எனும் பெயரினள். அந்த அங்கேரிய அன்னையை அவள் தன் சொந்த நாட்டிலிருந்து கம்யூனிஸ்டுப் பயங்கரம் துரத்தியடித்தது. எட்டாண்டுக் காலம் தான்பெற்ற சேயைப் பிரிந்து, தான் பிறந்த நாட்டைத் துறந்து தப்பியோடி, வெளிநாட்டிற் காலம் தள்ளுமாறு செய்தது கம்யூனிசம் எனும் கொடுமை. எட்டாண்டுகளுக்குப் பிறகும் அவள் தன் சொந்த நாட்டுக்குள் நுழைய முடியாது. நுழைந்தால் கம்யூனிஸ்டுப் பேயாட்சி அவளைச் சிறை பிடிக்கும், துன்புறுத்தும். என்ருலும் பெற்ற மகவின் மீதுள்ள பறறு அவள்பால் துணிச்சலை உண்டாக்குகிறது. கம்யூனிசம் எனும் பயங்கரத்தை எதிர்த்துக்கொண்டு செல்கிருள் அவள் தான் பெற்ற சேயை மீட்டுக் கொணர. இதோ அவள் தன் கதையைத்தானே சொல்கிருள். இது முற்றும் உண்மை. நாடறிந்த நல்லோர் அறிந்த, உலகறிந்த உண்மை.

ஒரு சமயம் நான் பழகியறிந்த தெருக்கள்தாம் அவை. அத்தெருக்கள் வழியே நான் விரைந்து நடந்து கொணடிருந்தேன். இப்போது அவை பழகியனபோலா தென்படுகின்றன! இல்லை. இல்லை. அங்கே அச்சத்தால் ஏற்பட்ட அமைதி நிலவில் கிடக்கிறது. அலைக்கழிப்பால் சூழ்ந்த விபரீதம் நிரம்பிக் கிடக்கிறது. குழந்தையாயிருந்தபோது நான் பார்த்துக் களித்துள்ள சுவர்கள்தாம் அங்குள்ள சுவர்கள். இப்போது அந்தச் சுவரையெல்லாம் துப்பாக்கி இரவைகள் துளைத்திருந்தன. பெரும் வெடிகுண்டுகள் சிதைத்திருந்தன. ரஷிய டாங்கிகள் அங்குமிங்கும் போய்க்கொண்டிருக்கின்றன— அச்சமூட்டிக் கொண்டு, ஆர்ப்பாட்டம் புரிந்து கொண்டு.

இதுதான் புடாபெஸ்ட் நகரம். இரக்கமற்ற கொடிய மனப்பான்மையோடு, கம்யூனிஸ்டு வெறியர்கள் அங்கேரியில நடந்த மக்கள் புரட்சியை நசுக்கிப்போட்ட பிறகு, அவலக்கோலம் பூண்டு, அவலக் காட்சி தரும் புடாபெஸ்ட் நகரம். கணவனை யிழந்த கைம்பெண் ஒருத்தியைப் போல் சீரிழந்து, சிறப்பிழந்து நிற்கும் புடாபெஸ்ட் நகரம்.

ஆயிரக்கணக்கான அங்கேரியர்கள் கம்யூனிஸ்டுகளின் வெறியாட்சியிலிருந்து தப்புவதற்குத் தங்கள் சொந்த நாட்டிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்தார்கள். அந்த வேளை தான் — நான் ஒருத்தி அந்த வெறியர் மத்தியிலே புகுந்துகொண்டிருந்தேன்—என் மதலையை மீட்டுக் கொணர்வதற்கு. எனக்கு நன்ருகத் தெரியும்—கம்யூனிஸ்டு வெறியர்கள் புகுந்துகொண்டிருக்கும் என் சொந்த நாடாகிய அங்கேரிக்குள் நான்போகத் துணிந்தது சாவோடும், சித்திரவதையோடும் நான் சூதாட்டம் ஆடத் துணிந்தமை போன்றதுதான என்று. ஆமாம், என் மகனை நான் காணத்தான் வேண்டுமென்ருல், அந்தச் சாவோடும், சித்திரவதையோடும் நான் சூதாட்டம் ஆடித்தானே தீர வேண்டும்.

டாம்மி—என் மகன். அவனை விட்டுப் பிரிந்தபோது அவனுக்கு வயது ஒன்று. இப்போது அவனுக்கு 9 வயதாயிருக்கும். ஐயோ, அவனை அங்கே விட்டுவிட்டு நான் மட்டும்

(4-ம் பக்கம் பார்க்க)

சொந்த நாட்டைப் பிறர்க் கடிமையாக்கிக் களித்துக் கிடப்பதில் பெயர் பெற்றவர்கள் உலகெங்குமுள்ள கம்யூனிஸ்டுகள். இந்த இலக்கணத்திற்கேற்ப அங்கேரியிலுள்ள கம்யூனிஸ்டுகள் சில வருடங்களுக்கு முன்னே தங்கள் துரோக வேலையில் தீவிர ஈடுபாடு காட்டினர்கள். அங்கேரியை ரஷியாவுக்கு அடிமையாக்கிக் கொடுக்கும் பணியை அருள்பணியாய் மேற்கொண்டார்கள். அப்போது அங்கேரியிலுள்ள உண்மையாளர்களும், உரிமை உணர்வு மிக்கவர்களும் கொதித்தெழுந்தார்கள். பெரும் புரட்சியே அங்கு மூண்டது. அந்த மக்கள் புரட்சியை மூர்க்க பலங்கொண்ட சோவியத் ரஷ்யா நசுக்கிப் போட்டது. மக்களின் உரிமையைப் பறித்துக்கொண்டது. உரிமை வாழ்வு வாழ்ந்த அந்த நாட்டை அடிமைக் காடாக்கியது. அதன் மூலம் தன் ஆதிக்க வெறியைக் காட்டி நிலைநாட்டிக் கொண்டது.

அப்படி ஆதிக்க வெறி தாண்டவமாடத் தொடங்கிய ஆரம்பக் கட்டத்தில் ஆயிரக் கனக்கான அங்கேரியர்கள் — குற்றமற்றவர்கள் — குழந்தைகள், முதியோர் உட்பட்டோர்-ரஷியாவின் டாங்கிக்கும், பீரங்கிக்கும், துப்பாக்கிக்கும் இரையானர்கள். மேலும் பல்லாயிரவர், உரிமை வேட்கைகொண்டோர் கம்யூனிஸ்டு வெறிக் கூட்டத்திலிருந்து, தப்பி வெளியேறி வேறு வேறு நாடுகளிலே போய் அகதிகளாகக் குடியேறினர்கள். அப்படித் தப்பியோடியவர்களில் இருவர் **ஜூடிக் மின்ட் சென்தியும் அவளது கணவனும்.** ஜூடித் மின்ட் சென்தியே கம்யூனிஸ்டு வெறிக் கூட்டத்தால் தனக்கு நேர்ந்த இன்னல்கள் பலவற்றை இங்கே கதை போல் சொல்கிருள். நிகழ்ச்சிகள் கதை போல் தோன்றினுலும், அவ்வளவும் உண்மை.

தியாகமும் தண்டச் செலவும்!

மலர் 20 | ஆண்டு சந்தா ரூ. 8 (27—5—62) தனிப்பிரதி 16 காசு [இதழ்

இத் துணைக் கண்டத்தின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் திரு. இராதாகிருட்டினன் அவர்கள், தாம் பதவியேற்ற உடன் ஒரு அறிக்கை வெளியிட்டார். அதாவது,

"எனக்கு ஏற்படுத்தியிருக்கும் சம்பளம் பத்தாயிரத்தை நான் வாங்கப்போவதில்லை; இரண்டாயிரத்து ஐந்நூறு மட்டுமே பெற்றுக்கொள்ளப் போகிறேன்"

என்பதாக அறிவித்தார்.

நாமும் அவரது தியாக உணர்வைக் கண்டு மகிழ்ந்தோம்—பாராட்டினோம்.

நாட்டின் பொதுப் பணத்தைத் தனிப்பட்ட ஒருவர் மட்டும் பெருந் தொகையாகப் பெறுவதும், பல கோடிக் கணக்கான மக்கள் வறுமையால் வாடி நலிவதுபோன்ற பிற்போக்குத் தனமான நிலைமை ஒரு சனநாயக நாட்டில் ஏற்படக்கூடாதென்பதில் நம்பிக்கை வைத்திருப்பவர்கள் நாம்; எனவே புதிய மக்கள் தலைவரின் சீரிய போக்கை வரவேற்று வாழ்த்தினோம்.

தேவையற்ற ஒரு கவர்னர் ஒவ்வொரு மாநிலத்திலும் வெறும் பவனி வந்துகொண்டுஆண்டொன்றுக்குப் பத்து இலட்சம் பெற்றுப் பொதுப் பணத்தைப் பாழாக்குவதை நாம் பல காலமாகவே எதிர்த்தும் கண்டித்தும் வருகிறோம்.

இந்த நிலையில் புதிய தலைவர் நம்முடைய நோக்கத்திற்கு ஒரு வழி காட்டியாக முன்வந்திருப்பதைக் கண்டு மகிழ்ந்தோம்.

ஆனால், இந்த மகிழ்ச்சி தனது முழு வடிவத்தையும் பெறுவதற்குள், புதிய தலைவரின் சம்பளக் குறைப்பு அறிக்கை வெளியான இரண்டொரு நாட்களுக்குள் இன்னொரு அறிக்கையை அரசாங்கம் வெளியிட்டது. அதாவது,

"ஓய்வு பெறும் இத்துணைக் கண்டத்துத் தலைவர்களுக்கு இனி ஆண்டொன்றுக்குப் பன்னிரண்டாயிரம் ரூபா தரப்படும்"

என்று அந்த அறிக்கை கூறிற்று.

இந்த அறிக்கையைக் கண்ணுற்றதும் நாம் கொண்ட மகிழ்ச்சி மங்கிற்று. மங்கியது மட்டுமல்ல; வேதனையைக்கூடத் தந்துவிட்டது என்று கூறினால், அது மிகைபடக் கூறியதாகாது.

ஏனென்றால், மக்களின் பணம் பாழாகப்படாதென்பதில் பெரிதும் பெருநோக்கம் காட்டித் தம்முடைய சம்பளத்தைக் குறைத்துக்கொண்ட தலைவர், ஓய்வு பெறும் தலைவர்களுக்கு ஆண்டொன்றுக்கு இப்போது அளிக்கப்பட்டுவரும் ஓய்வு ஊதியமான ஆயிரத்தோடு மேலும் பன்னிரண்டாயிரம் கொடுப்பது என்ற முடிவை ஆதரித்து, அந்த அறிக்கையிலும் கையெழுத்திட்டிருக்கிறாரே என்பதை எண்ணும்போதுதான் நமக்கு வியப்பும் வேதனையும் ஒருங்கே உண்டாகிறது.

ஓய்வு பெறும் தலைவர்கள் திங்கள் ஒன்றுக்கு ரூபா ஆயிரம் இப்போது பெற்று வருகிறார்கள். இது போதாதென்று மேலும் பன்னிரண்டாயிரம் ரூபாயை அவர்கள் செலவுக்கென்று தரப்படுவதானால், அது எவ்வளவு நியாயமற்றது என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

இந்தப் பன்னிரண்டாயிரம் ரூபாயும் எதற்கென்று நினைப்பீர்கள்.

இந்தப் பெருந்தொகை அவர்களின் காரியாலயச் செலவுக்கு என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஓய்வுபெறும் தலைவர்கள் எந்தக் காரியாலயத்தை வைத்து நடத்துகிறார்கள் என்பதற்கு அந்த அறிக்கையில் விபரம் தரப்படவில்லை. வறிதே அவர்களின் காரியாலயச் செலவுக்கு என்று மட்டுமே குறிப்புள்ளது.

அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் பொதுப் பணத்தில் ஒரு பகுதி ஓய்வு பெறும் தலைவர்களின் காரியாலயச் செலவுக்கென்று ஒதுக்கப்படும் போது, அவர்களின் காரியாலயம்பற்றிய விளக்கமும் விபரமும் தரப்படவேண்டுமல்லவா?

அண்மையில் ஓய்வுபெற்ற தலைவர் டாக்டர் இராசேந்திரபிரசாத் அவர்கள், தாம் தம்முடைய ஓய்வு காலத்தை நூல்கள் எழுதுவதில் செலவிடப்போவதாக ஒருமுறை சொன்னார். பிறகு, வழக்கம்போல் அரசியலில் ஈடுபாடு கொள்ளப்போவதாகவும் அறிவித்துள்ளார்.

அவர் கூறிய இரண்டில் எதில் ஈடுபாடு கொண்டாலும், மக்களின் பொதுப்பணத்தைப் பயன்படுத்தலாமா என்பதைப் பொதுமக்கள்தான் சிந்தித்துத் தீர்ப்புக் கூறவேண்டும்.

இதுபோலவே, முதல் தலைவராக இருந்த அன்பர் ஆச்சாரியார் அவர்களுக்கும் இந்தப் பேறு (பன்னிரண்டாயிரம்) கிடைக்கப்போகிறதாம்.

டாக்டர் இராசேந்திரரின் காரியாலயச் செலவும், அன்பர் ஆச்சாரியார் அவர்களின் காரியாலயச் செலவும், இனிப் பொதுமக்களின் வரிப்பணத்தைக்கொண்டு நடைபெற இருக்கிறது.

எனவே, அவ்விருவரின் காரியாலயங்களையும், அவற்றிற்குப் பொதுமக்களின் வரிப்பணம் செலவாவதையும் பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதோடு, ஒரு பக்கத்தில் சம்பளக் குறைப்பு என்ற பெயரால் தியாக உணர்வையும், இன்னொரு பக்கத்தில் அலுவலகச் செலவு என்ற பெயரால் தண்டச் செலவுக்கு வழிகோலுவதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

தப்பியோடி வந்துவிட்டேனே! அதற்காக அவன் என்னை வெறுத்தொதுக்கிவிடுவானே?

சிறை அச்சுறுத்தியது

என் மகனை நான் விட்டுப் பிரியவா நினைத்தேன்? அது என் உள்ளத்தில் எவ்வளவு பெரிய கொந்தளிப்பை உண்டாக்கிற்று தெரியுமா? ஐயோ, அதைத் தவிர வேறு வழியே அப்போது தென்படவில்லையே! அவ்வளவு இளஞ் சிசுவாக இருந்தான் என் மகன். அவ்வளவு பாதுகாப்பற்ற நிலையிலிருந்தான் அவன்.

1948. இலையுதிர் காலம். அப்போதுதான் இந்தத் துன்பக் கதைகள் எல்லாம் துவக்கமாயின. நானும் என் கணவனும் புடாபெஸ்டிலிருந்தோம். என் கணவர் எந்த நிமிடமும் கம்யூனிஸ்டுகளால் சிறைபிடிக்கப்படுவார் என்பதை உணர்ந்தோம். வேறு வழி கிடையாது. நம் நாட்டிலிருந்து வெளியேறிவிட வேண்டியதுதான். இன்றேல், ஆயுள் முழுதும் வெஞ்சிறையில் கிடக்கச் சித்தமாயிருக்கவேண்டுமே! எல்லைப்புறத்தைத் தாண்டிக் கள்ளக்கடத்தல்காரன் ஒருவன் பாதுகாப்பானதோரிடத்திற்கு என் கணவனை அழைத்துச் சென்றான். —ஆமாம், வேறு வழியில்லையே! நான் மறுநாள் கிளம்பவேண்டும்—என் மகன் டாம்மியுடன். இடையில் ஓர் பேரிடர் வந்துற்றது. பேருந்தொன்றால் நான் மோதப்பட்டேன். கால் எலும்பு முறிந்துவிட்டது. மருத்துவமனைக்குஎடுத்துச்செல்லப்பட்டேன்.

காலம் தாழ்ந்தது. அது பின்னும் பேரிடராக முடிந்தது. இரண்டு வாரங்களுக்குப்பின் இரகசிய காவல் நிலையம் எனக்கு அழைப்பு விடுத்தது. என் கணவர் எங்கே என்ற விவரத்தை அவர்கள் என் மூலம் தெரிந்துகொள்ளவேண்டுமாம். உடனே நான் தப்பிச்செல்லவேண்டும். கால் கட்டைப் பற்றியோ, நலிவைப் பற்றியோ எண்ணுதற்கு அங்கே நேரமில்லை.

அதே கடத்தல்காரன் என்னையும் அழைத்துச்செல்ல ஒப்பினான். ஆனால் அவன் ஒரு நிபந்தனை விதித்தான். என் அருமைச் சேய் டாம்மியை நான் விட்டுவிட்டுக் கிளம்ப வேண்டும்.

அந்த இரவு என் மகனை நான் தொட்டிலிட்டேன். அவ்வேளை அவனை விட்டுவிட்டுச் செல்லவேண்டிய அவல நிலை என் உள்ளத்தைத் தாக்கியது. அப்போது என்னுள்ளே கப்பிய சோகம் சொல்லும் தரத்ததா!

நான் அங்கேயே இருந்திருக்கலாம். இருந்திருந்தால்! என்னைப் பற்றிய நம்பிக்கையோடு, என் மகனின் எதிர்காலத்தையுமல்லவா சேர்த்திழக்க நேர்ந்திருக்கும். நான் அப்போதைக்குத் தப்பித்துக் கொண்டால், பின்னர் என் மகனையும் மீட்டுக்கொண்டுவிடலாமே! நான் என் மகனை முத்தமிட்டேன். என் கணவரின் அன்னையிடம் அவனை ஒப்படைத்தேன். கிளம்பினேன்.

எலும்பு முறிந்த காலோடு மெல்ல மெல்ல, தத்தித் தத்தி முப்பது கல் தொலைவை நடந்தே கடந்து சென்றேன். என்றாலும் தப்பிச் செல்வது என்னவோ எளிதாகத்தான் இருந்தது. கடைசியாகச்சுவிட்சர்லாந்தை அடைந்தேன். அங்கே என் கணவரிருந்தார். நாங்கள் எல்லோரும் ஒரே இடத்தில் சீக்கிரம் சேர்ந்திருக்க வேண்டுமென்று வேண்டுதல்கள் புரிவதும்,திட்டங்கள் போடுவதுமாக நாட்கள் நகர்ந்தன.

அங்கேரியில் கம்யூனிஸ்டுகளிடமிருந்து தப்பி வெளியேறுவது சுலபமாக இருந்தது. ஆனால் வெளியிலிருந்துகொண்டு அங்கிருப்போரை மீட்டுக் கொணர்வது அத்துணை எளிதாகத் தோன்றவில்லை. நாங்கள் போட்ட ஒவ்வொரு திட்டமும் தவறிப் போயிற்று. அல்லது பயனற்றதாயிற்று.

என் மகன் டாம்மிக்கு நான் அப்போதைக்கப்போது பார்சல்கள் அனுப்பினேன். நோய்வாய்பட்டுக் கிடந்த என் நண்பர்கள் சிலருக்கு மருந்துகள் அனுப்பினேன். என் சொந்த ஊரோடு என்னைத் தொடர்புபடுத்திக் காட்டியவை இவற்றைத் தவிர, வேறெதுவும் இல்லை. திரும்பவும் நான் கருவுற்றேன். என் மற்றொரு மகன் இளம்பியரி பிறந்தான். பியரியின் பிறப்பு டாம்மியிடமிருந்து நான் பிரிக்கப்பட்டிருப்பதைச் சற்றே ஆற்றிக் காட்டிற்று. என்றாலும், என் மன வேதனையை முற்றிலும் மறைத்துக் காட்ட அதனால் முடியுமா?

பியரி வளர்ந்தான். மழலைமொழி பகர்ந்தான். ஆண்டுகள் நகர்ந்தன. பியரியிடம் நான் ஓயாது ஒழியாது பேசிய பேச்சுக்கள் எல்லாம் என்னுடைய டாம்மியைப் பற்றியவைதாம். என்னுடைய பியரியும், தான் கண்டேயறியாத அண்ணனைப் பற்றிய இன்ப நினைப்பில் திளைக்கத் தொடங்கினான்.

"அண்ணன் எங்கேயம்மா? எப்போது அவனை அழைத்து வருவாயம்மா?" என்று இடைவிடாது என்னிடம் வினாத் தொடுக்கத் தொடங்கினான் அவன்.

(15-ம் பக்கம் பார்க்க)

காஞ்சீபுரம்

27—5—'62.

தம்பி !

வகை வகையான வண்ணமலர்கள் மணம் பரப்பும் பொழில். பூங்காற்று வருடி இன்பம் வழங்கும் வேளை. புள்ளினம் இசை அளிக்கிறது. அதனினும் சுவைமிகு பாகு மொழி செவியில் விழுகிறது; பார்க்கிறான் இதற்கு முன் பார்த்தறியா வனப்புமிகு பாவையை! அமருக! என்கிறாள் அணங்கு, விழியால் விருந்திட்டு. அஃது ஓர் பளிங்கு மண்டபம். அவன் ஓர் இளைஞன்—போர்வீரன்,

தங்கள் தீரத்தை மெச்சாதார் இல்லை—இங்கு......

உறுதிதளராத உள்ளம் என்று உரைத்திடக்கேட்டு உவகை கொண்டேன்—பலர் உரைத்தனர்.

சீறி எழும் படைகளைச் சின்னாபின்னமாக்கத்தக்க போர்த்திறன் உண்டு, எனினும் காலமறிந்து காரியமாற்றவேண்டும் என்று தாங்கள் நடந்துகொண்ட போக்கினைக்கண்டு வியந்து பாராட்டாதார் இல்லை.

எதற்கும் அஞ்சமாட்டார்—ஆனால், என் மகனே! என்று பெற்றவள் உருக்க முடன் பேசும்போது, நிலைகுலையத்தான் செய்யும் என்று கூறினர், சிலர்! தங்கள் தரமும் திறமும் அறியாதார்! பகைவர் வீசிடும் வாளுக்கு எவ்விதம் அஞ்சாது இருப்பீரோ, அதுபோன்றே உமது தாயின் தழுதழுத்த குரல் கேட்டும், கண்ணீர் கண்டும் தளராது நின்றீரே, அதனை என்ன கூறிப் பாராட்டுவது. மங்கை பேசுகிறாள்—இளைஞன் இன்பத்தில் மிதக்கிறான்.

வேலூர் புறத்திலே, அவன் வாழ்ந்திட அமைந்ததோர் மாளிகையில் வேலைப்பாடு மிகுந்த இருக்கைகளை வரிசைப்படுத்துவதிலும், மற்றப்பல ஆடம்பரக்கோலங்களை அமைப்பதிலும் எடுபிடிகள் மும்முரமாக இருந்தனர்.

பொன்னிழை மின்னிடும் அங்கி! வைரமணிகள் பதித்த வாளுறை!—அவனுக்கு.

கருமுகில் நிறம் கொண்டதும் மின்னல் வேகத்தில் பாயத்தக்கதுமான புரவி—அவனுக்கு.

பன்னீர் பெய்கிறார்கள் அவன் குளித்திட. செயற்கை ஓடையில்!

பழச்சாறு நிரப்பிய கோப்பைகளை ஏந்திச் செல்கிறார்கள், பக்குவமறிந்த பணிப் பெண்கள்—அவன் குற்றேவல் கேட்டு நடந்திடும் குமரிகள்!!

சூடும் சுவையும்

[1]

பலஆயிரம் வராகன்கள் பேழையில்! அவ்விதமான பேழைகள் பலப்பல!

அன்பரே! ஆருயிர் நண்பரே!—என்று அழைக்கிருர், இளவரசர்.

இவரில்லாவிட்டால் உமக்கு ஏது இந்த வெற்றி? என்று கேட்டுக் கெக்கலி செய்கிருள் இளவரசி!!

ஓவியர் இரவு பகலென்று பாராமல் வேலே செய்கிருர்—நமது நண்பரின் வடிவத்தைத் தீட்டி, நமது கலேக்கூடத்தை அழகுபடுத்த, என்கிருர் இளவரசர். சிலே அல்லவோ சமைக்கவேண்டும் இவருக்கு! ஓவியம் போதாதே!!—என்கிருள் இளவரசி.

இவர்க்கு ஏற்ற எழிலோவியம் உண்டு, இங்கு, அறிவாயோ? என்று கேட்கிருன் இளவரசன்; மின்னலிடையாள்!!—தெரியுமே முன்பே என்று குறுநகையுடன் கூறுகிருள் இளவரசி.

இவ்வளவு விரைவில், இத்துணே எளிதாக வெற்றி கிடைக்கும் என்று நான் எண்ணினதே இல்லே.

கோட்டை வலிவுள்ளதல்லவோ!

படைக்கலன்களும் நிரம்ப,அவர்களிடம்!

முற்றுகை நீண்டுகொண்டேபோகும் என்ற கலக்கம் எமக்கெல்லாம்...

நேரடித்தாக்குதலில், நாம் சிக்கிக்கொண்டிருந்தால், நிரம்ப அழிவு நேரிட்டிருக்கும்...

நல்லவேளேயாக எதிர்பாராதவகையிலே உதவி கிடைத்தது.

சாதாரண உதவியா!! கோட்டையைத் தாக்கித் தகர்த்திடவேண்டிய அவசியமே எழவில்லேயே...

தட்டினேம்! திறக்கப்பட்டது!

கொட்டினேம் வெற்றி முரசு!

படையின் தளபதிகள் பேசி மகிழ்கிருர்கள் இதுபோல.

பன்னீர் தெளிக்கிருள் பாவை, இங்கிதமறிந்த முறையில். அன்ருேர் நாள், அடவி வழி நுழைந்து மாற்ருரைத் தாக்கப் புரவிமீது சென்றபோது, சேற்ருற்றிலே பாய்ந்ததால், சட்டை எல்லாம் சேறு மயமாகிவிட்டது—அந்த நினேவு வந்தது வீரனுக்கு. பலநாள் அந்தச் சேறுபட்ட சட்டையைப் பார்த்துப் பார்த்து அவன் பூரித்ததுண்டு—வெற்றி விருது என்று மகிழ்ந்ததுண்டு.

அன்று சேறு! இன்று பன்னீர்!!

அன்று மாற்ருரைத் தாக்கச்சென்றபோது, சேறு. இன்று?

"நமது மண்டலத்துக்கு மகத்தான சேவை செய்த மணிமுடிக்கு மருதூர் மிட்டாவைப் பரிசாகத் தருகிறேம்"

என்று மன்னர் அவையிலே அறிவித்து அதைத் தொடர்ந்து வரவேற்பு விழா நடத்துகிருர்—விழாவிலே ஒரு பகுதிதான் — பன்னீர்தெளித்து, பாவை பளிங்கு மண்டபம் அழைத்துச் சென்று, பாடலாலும் ஆடலாலும் சுவையூட்டுவது.

காட்டாற்றுச் சேறு முன்பு! கட்டழகி தெளித்திடும் பன்னீர் இப்போது!!

பன்னீர் தெளித்திடும்போதுஅவனுக்குக் காட்டாற்றுச் சேறு நினேவிற்கு வருகிறது.

களிப்பு உலருகிறது — கண்களிலே நீர் துளிர்க்கிறது.

காட்டாற்றுச் சேறு!!—என்று அவன் முன்பு, பலரிடம் காட்டிக் காட்டிக் களிப்படைந்தான். கட்டழகி பன்னீர் தெளிக்கிருள் — எவரேனும் கண்டுவிடுவரோ என்று எண்ணிக் கலங்குவதுபோல இருக்கிறது அவன் பார்வை.

✻

இரக்கமற்றவர்கள் பிடரியைப் பிடித்துத் தள்ளுகிருர்கள், வைக்கோற்புல் பரப்பப்பட்டிருந்த கட்டாந்தரையில்—உடலெங்கும் புண் அவனுக்கு—உடை கந்தல்—கீழே வீழ்கிருன் — புல்லில் மறைந்திருந்த பாம்பு சீறுகிறது—பாய்ந்து செல்கிறது-கை கொட்டிச் சிரிக்கிருர்கள் கொடியவர்கள்.

ஒருபுறம் நச்சரவம்—மற்ருேர்புறம் அதனினும் கொடியவர்கள்.

வாட்போரில் வல்லவனும்—வாகை பல சூடியவனும்! வீரக் கழல் அணிந்தவனும்!! ஏடா! நீதானே அது! கொட்டிலில் புகுந்துள்ள நீயோ, கொற்றம் ஆண்டவன்!! கொலு மண்டபத்திலே கோலமயிலாள் ஆட, குயிலாள் பாட, மிக்க கெம்பீரமாக வீற்றிருப்பாயாமே! கேள்விப்பட்டதுண்டு! இன்று? உனக்கேற்ற இடம்! நாட்டியமாட நாகம்!!

வெற்றி அல்லது வீரமரணம் என்று முழக்கமிடுவானும்......

இப்போது என்ன கூறி முழக்கமிடுவான்! கூவு, கூர்வாளே நம்பிக்கெட்டவனே! உரக்கக்கூவு!...வேழப்படையை முன்னே அனுப்பு — வேற்படையைப் பின்னேடு அனுப்பு! வெற்றிமுரசு எடுத்துச் செல்க!!—என்றெல்லாம் கூவு!!

கற்கோட்டையைத் துளேத்திட எவராலும் முடியாது என்று எண்ணிக்கொண்டான், ஏமாளி.

திறந்துவிட ஆள் இருக்கும்போது, எந்த முட்டாள் கோட்டையைத் துளைத்திட நேரத்தைச் செலவிடு வான்?

தட்டினேம்! திறக்கப்பட்டது!!

வெட்டி வீழ்த்துவோம் என்று வீராப்புப்பேசிக் கொண்டிருந்தான்.

விழா நடத்துவோமா, வீழ்ந்தவனுக்கு......ஆமாம், நடத்தவேண்டும்...ஆடை எப்படி இருக்கவேண்டும்...

இவன் நம்பிக்கிடந்த வேழப்படை சிதறி ஓடிய போது கீழே வீழ்ந்துவிட்ட, முகபடாம், இவனுக்கு ஆடை...ஒடிந்த தந்தங்களைத் தலையிலே வைத்துக் கட்டிடலாம்—முடி! மணி மகுடம்!!

குதிரைக்குப் போடுவானே 'கொள்ளு' அது ஒரு வேளை, யானைக்குப்போடுவானே 'தழை' அது ஒருவேளை —இப்படி மாறிமாறி, விருந்து.

உடலெங்கும் வடு. உலராதநிலையில். உள்ளமோ உலைக்கூடம்போல. நாடாண்டவன். மாற்றானிடம் பணியாதவன். போர்த்திறமை மிக்கவன். கூட இருந்து குழி பறிப்போர் இருக்கக்கூடும் என்று துளியும் எதிர்பார்த்தவன் அல்ல. வெஞ்சமரில் வீழ்ந்தானில்லை. வஞ்சகத்தால் வீழ்த்தப்பட்டான்!! வாட்டி வதைக்கிறார்கள்!! பொன்னிறமேனி புழுதிபடிந்துகிடக்கிறது. காலிலும் கரங்களிலும் தளைகள் பூட்டப்பட்டிருக்கின்றன. சிறைக் கூடக் காவலை மேற்கொண்ட சிற்றறிவுள்ள கொடியவர்கள், அவன் உண்ண வேகாச் சோற்றினை மண் பாண்டத்திலிட்டு, நாற்றமடிக்கும் சேற்று நீரை மண் குவளையில் ஊற்றி, எதிரே வைக்கிறார்கள். ஒருகணம் கண்களை மூடுகிறான். என்னென்ன எண்ணுகிறானே!! அரண்மனையில் அவன் நடத்திய விருந்துகளை எண்ணிக் கொள்கிறானே? இல்லை! இல்லை! கோட்டையைத் தாக்கித் தகர்த்திடவில்லை! தட்டினார்கள்! திறக்கப்பட்டது!! சமர் செய்து வீழ்த்தினார்களில்லை, சதிசெய்து சாய்த்தனர்!! புல்லில் மறைந்திருந்த பாம்புபோல, புல்லன் இருந்து, காட்டிக்கொடுத்துவிட்டான், கோட்டை பிடிபட்டது, கொற்றம் அழிந்தது.—இதனைத்தான் எண்ணிக் கலக்கமடைகிறான். உடலிலே உள்ள வடு ஒவ்வொன்றும் ஒவ்வோர் வீரச்செயலுக்குச் சான்று!, அதனை எண்ணிக்கொள்கிறான், கண்களிலே களிப்பொளி!!

கட்டழகி பன்னீர் தெளித்திடும்போது, கலக்கம் அடைகிறான் ஒருவன், பளிங்கு மண்டபத்தில்.

காதகர் கடுமொழி வீசிடும்போது, உடலிலே உள்ள புகழ்க்குறி கண்டு பூரிக்கிறான் வஞ்சகத்தால் வளைக்கப்பட்டு, சிறையில் தள்ளப்பட்டுக் கிடக்கும் கொற்றவன்.

கொற்றவன், கொடுமை கண்டும் பெருமிதம் குன்றாது இருக்கக் காரணம், அவன் நெறி தவறாததால் — வீரம் குன்றாததால்.

கோலமயிலாள் கடை இடை காட்டிப் பன்னீர் தெளித்த போதும், களிப்படையாது பளிங்கு மண்டபத்து வீரன் கலக்கம் கொண்டிடக் காரணம், அவன் காட்டிக்கொடுத்த கயவன், அந்த நினைப்பு அவன் நெஞ்சினைச் சுட்டெரிக்கிறது —அதனால்.

❋

என்ன அண்ணா, இது. நெடுந்தொலைவு போய்வந்திருக்கிறாய், நீண்ட நாட்களுக்குப் பிறகு மடல் தீட்டுகிறாய்—சென்ற இடத்துச் சிறப்புகள், செய்த காரியத்தின் அளவு, தரம், கண்ட நண்பர்கள், கூறிய விஷயங்கள், தென்பட்ட குறிகள், இவைபற்றியெல்லாம் நிரம்பக் கூறப்போகிறாய், கேட்டுச் சுவையும் பயனும் பெறலாம் என்று ஆவலுடன் இருக்கிற எம்மிடம், பளிங்கு மண்டபம், பன்னீர் தெளிக்கும் பாவை, சிறைக்கூடம், சீறி வரும் நாகம்; கொடியவர் கொற்றவனைப் படுத்திடும் பாடு; இவைபற்றியெல்லாம் கூறத் தொடங்கிவிட்டாய்; தில்லி பற்றிய செய்திகளைக் கூறவேண்டிய வேளையில் —என்றுதானே கேட்கிறாய் — அவசரப்படாதே, தம்பி! தில்லி போகவேண்டுமென்றால், உடனேவா! நெடுந்தொலைவு அல்லவா? போகலாம். இப்போது இந்த இருவரை மீண்டும், மனக்கண்முன் கொண்டு வா.

சிறையில் அடைபட்ட சித்தம் கலங்கா மன்னன்.

காட்டிக் கொடுத்ததால் கட்டழகி தெளித்திடும் பன்னீரைப் பரிசுபெற்ற கயவன்.

இந்த இருவர், இரு வெவ்வேறு நிலைமைகளை விளக்கும் நோக்குடன்தான், உன் முன் காட்டப்பட்டுள்ளனர்.

இந்த இருவரில், எவருடன் உறவாட, உரிமை கொண்டாட, உடனிருக்க, இசைவு தருவாய்!

கேட்கவா வேண்டும். காட்டிக் கொடுப்போனிடம் கூடிக் குலாவிடும் கெடுமதி எப்படி உனக்கு ஏற்பட முடியும்!! காட்டாற்றுச் சேறு, கட்டழகி வீசிடும் பன்னீரிலும், மாண்புடையது என்பதனை உணர்ந்த மரபினனல்லவா, நீ.

இதோ, இன்னும் இருவர். இவர்களையும் பார், தம்பி! பயனற்ற வேலை என்று நினைத்துவிடாதே — வெறும் படம் அல்ல, பாடம் புகட்டும் படம், மறவாதே.

❋

மதிமிகு பெரியீர்! மாண்புடை நண்பரீர்!
குறிப்பறிந்து நடந்திடும் குணாளரே! வருக!
வாழ்க!! உமது புகழ் புவி எங்கும் பரவிடத்தக்
கதான, பாமாலை தொடுத்திடுவோம்.

என் நாடு! என் இனம்! என்ற பித்து
நீக்கிய பெம்மானே, வருக! வாழ்க!!

நம்பி வந்தவர்க்குக் கை கொடுக்கும் நல்லறிவாளரே, வருக! வாழ்க!!

நாட்டுப் பற்று என்பது போதை, அதனை நாம் உட்கொள்ளல் தீது என்று உணர்ந்து சொல்லால் அல்ல, செயலால் விளக்கிய வித்தகரே, வாழ்க! வருக!!

வலுத்தவனிடம் மற்றவன் எதிர்த்து நிற்பது அழிவுக்கு வழிகோலும், அஃது ஆகாது! பணிவது, இணைவது, பாங்கான முறை! பாரிலே, பயங்கரங்களை ஒழித்திடும் முறை இதுவே! — என்று கூறிச் சிற்றரசாகக் கிடந்ததோர் இடத்தைப் பேரரசிடம் ஒப்படைத்துச் சிறப்பான சேவை செய்த செம்மலே வருக!!

தங்கள் பேச்சிலே அறிவு மணம் கமழ்கிறது.

தங்கள் போக்கிலே, இராஜதந்திரம் மிளிர்கிறது.

தங்கள் பார்வையிலே வேதாந்தம் சொட்டுகிறது. வேறோர் நாட்டுக்காரர் என்றிருப்பினும், எமது நாட்டினை இருப்பிடமாகக் கொண்டவரே, வருக! வாழ்க!!

எந்நாடுதான் எனக்கு ஏற்புடைய நாடாகும் என்ற தத்துவம் பொடிபடத் தாக்கிய மாவீரனே, வாழ்க. எந்த நாட்டிலே, இன்பம் கிடைக்குமோ, வளம் நிரம்பிக் காணப்படுமோ, அந்நாடே எந்நாடு!! என்ற அரிய அரசியல் தத்துவத்தை அவனிக்கே அளித்த ஆசானே! வருக!!

❊

தம்பி! இந்த நிலையில் அரச அவையிலே புகழாரம் சூட்டப்பட்டுக் காணப்படுகிறான் ஒருவன். இதோ மற்றொருவன். அவனைச் சூழ்ந்துகொண்டு, கூவுகிறார்கள், கொக்கரிக்கிறார்கள்; விளையாட்டுச் சிறுவர்கள் கற்களை வீசுகிறார்கள். முரட்டுப் பெரியவர்கள், காலைத் தட்டிக் கீழே உருட்டுகிறார்கள். கடுமொழி வீசுகிறார்கள், கண்டவர்கள்.

❊

பிடி! அடி! உதை! வெட்டு! குத்து! கொல்லு! காரித் துப்புங்கள் முகத்தில்! காதைப் பிடித்துத் திருகுங்கள்! கண்ணைத் தோண்டிப் போடுங்கள்! கையை ஒடித்து விரட்டுங்கள்!

❊

இவ்விதமான இழிமொழிகளைக் கேட்டுக்கொண்டு இருக்கிறான் இவன்.

முன்னவன், நாட்டைக் காட்டிக்கொடுத்து, புகழாரம் சுமக்கிறான்.

இரண்டாமவன், நாட்டுக்காக உழைத்ததற்காக இழிமொழியைப் பரிசாகப் பெறுகிறான்.

இந்த இருவரில், நாம் போற்றத்தக்கவர், புல்லர்களின் பொல்லாங்கு மொழிக்குப் பயந்துகொண்டு, நாட்டுக்கு உழைப்பதை விட்டுவிட மறுக்கும் மாண்புடைய வீரனல்லவா?

சரி, அண்ணா! இப்போது எதற்காக, இந்த விஷயமெல்லாம்? என்றுதானே கேட்கிறாய், தம்பி! நான் தில்லிக்குப் பயணமானபோது, இவைபோன்ற எத்தனையோ காட்சிகளை மனக்கண்ணால் கண்டேன். என்னென்னவோ வகையான எண்ணங்கள். அவைகளிலே ஒரு சிலவற்றைத்தான் மீண்டும் நினைவிற்குக் கொண்டுவர முடிகிறது.

எங்களை ஏற்றிச்சென்ற விமானம், எத்தனை எத்தனையோ விதமான மேகக் குவியல்களைத் தொட்டும் தொடாமலும், சென்றுகொண்டிருந்தது. என் மனதிலே பல்வேறு **விதமான எண்ணங்கள்,** அலைஅலையாகக் கிளம்பின. இரவுபன்னிரண்டு. விமானம் தில்லிநோக்கிப் பறக்கிறது — என் மனமோ உன்னைப் பிரிய மறுக்கிறது.

கண்களை மூடியபடி, ஆனால் உறங்காமல், என் பக்கத்தில், தருமலிங்கம் உட்கார்ந்திருந்தார். அவர் முகத்திலே ஓர்விதமான களை—வெற்றிக் களை என்றே கருதுகிறேன் தெரிந்தது. காரணத்தோடுதான். என்ன காரணம் தெரியுமோ? நான் தில்லிக்குச் செல்லும் நிலை ஏற்பட்டது இருக்கிறதே, அது தோழர் தருமலிங்கத்தின் வெற்றிகளிலே ஒன்று. இதமாகப் பேசிப் பேசி என்னை 'இராஜ்யசபை' செல்வதற்கு இசையும்படிச் செய்வதிலே அவர் வெற்றி பெற்றார். பார்! முடியாது முடியாது என்று சொன்னவரை, அழைத்துக் கொண்டு போகிறோம், தில்லிக்கு என்ற எண்ணம் போலும் அவருக்கு. அந்தக் களைதான் முகத்தில்.

என்னை அவர் தில்லிக்கு அழைத்துச் செல்வதிலே வெற்றி கண்டுவிட்டார் எனினும் என் மனதிலே, ஐயப்பாடு இருந்தது. செல்வதால் பயன் உண்டா? செய்யத்தக்கனவற்றுக்கு வாய்ப்புக் கிடைக்குமா, அல்லது அங்குபோய்ச் செயலற்றுக் கிடக்கவேண்டிவருமோ என்ற எண்ணம் மனதைக் குடைந்தபடி இருந்தது.

பேசினான் எதை எதையோ.

முதல் தடவை என்பதால் சும்மா விட்டார்கள்.

பேசிவிட்டு ஓடிவந்துவிட்டான்.

பேச்சுக்குப் பலத்த எதிர்ப்பு.

எல்லோரும் எதிர்த்தனர்; தாக்கினர்.

பேச்சுக்குப் பலன் கிடைக்கவில்லை.

திராவிடநாடு பிரிவினையைப் பிய்த்து எறிந்துவிட்டனர்.

என்றெல்லாம், பலரும் பேசி வருவதையும் எழுதி வருவதையும் பார்த்தபிறகுதான், தம்பி! தருமலிங்கம் என்னைத் தில்லிக்கு அழைத்துக்கொண்டு போனது பயனற்றுப் போகவில்லை, சுவை கிடைக்காமலும் போக வில்லை என்று உணர்ந்து, மகிழ்ச்சியுற்றேன்.

தில்லிக்குச் சென்று பேசச் சந்தர்ப்பம் கிடைக் காது திரும்ப நேரிட்டால், மற்றவர்கள் என்ன சொல் வார்கள் என்பது கிடக்கட்டும், என் மனமே மெத்த வேதனைக்காளாகும்.

பேச வாய்ப்புக் கிடைத்து, பேசியான பிறகு, அந்தப் பேச்சு, கவனிப்பாரற்று, பத்தோடு பதினொன்று ஆக்கப்பட்டு, என்ன பேசினான்? என்று ஒருவர் கேட்க, ஏதோ பேசினான் என்று அலட்சியமான பதில் கிடைத்து, அந்தப் பேச்சுப்பற்றி, ஒருவிதமான பரபரப்பு எதிரொலி இல்லாமற்போனால், எனக்கு மிகுந்த ஏமாற்ற மும், திகைப்பும் ஏற்பட்டுவிடும். என் இயல்புதான் உனக்கு நன்றாகத் தெரியுமே, தம்பி! அங்கு செல்லும் என்னை இங்கிருந்து வாழ்த்தும் நல்லவர்களோ,

பாரேன் தில்லிக்குப் போனதும்.

சிந்துவார் உண்டா அங்கே.

கும்பலிலே கோவிந்தா ஆக வேண்டியது தான்.

தில்லியில்போய் இங்கு பேசுவதுபோலப் பேசிக்கொண்டிருக்கமுடியுமா?

அது எப்பேற்பட்ட இடம்? எவ்வளவு பெரியவர்களெல்லாம்அங்கே இருக்கிறார்கள்! ஜாம்பவான்கள் இருக்கிற இடம். அந்த இடத்தைப் பார்த்ததும், பேச்சா வரும்! குளறி விடுவான் பாருங்கள். இங்கே மேடைக்கு மேடை கத்துகிறானே, திராவிடநாடு திராவி-நாடு என்று, எங்கே, தில்லியிலே போய்ப் பேச்சொல்லு, பார்ப்போம்! கப்சிப்! வாயைத் திறக்கமுடியாது. சுற்றிவரலாம். சுகம் அனுபவிக்கலாம். கடைவீதி போய்ச் சாமான் வாங்கலாம்—வேறே என்ன செய்யமுடியும்!

தில்லியிலேபோய்ப் பேசினால் கூட, இந்தப் பேச்சை யார் கவனிக்கப்போகிறார் கள். கிணற்றிலே விழுந்த கல்மாதிரிதான். ஒருவரும் பொருட்படுத்தமாட்டார்கள்.

❋

தம்பி! இப்படி எல்லாம், பரந்த அனுபவம் காரண மாகவும், சொந்த அனுபவம் காரணமாகவும், என்பால் உள்ள நிரம்பிய அன்பு காரணமாகவும், பலர் நல்லுரை கூறித்தானே அனுப்பிவைத்தார்கள்! அதுபோல ஆகி விட்டிருந்தால், இந்நேரம், நாநர்த்தனம் நாராசமேடை யிலே நள்ளிரவு வரையிலும் நடந்திருக்குமே.

ஆனால், தம்பி! என் மனம் சோர்வு சலிப்பு அடை யாதவிதமாக நிலைமைகள் வடிவமெடுத்துள்ளன.

இராஜ்யசபையிலே நான் பேசிய பேச்சு இன்று, அன்று எழும்பிய ஓசை என்ற அளவில் இல்லை, கடந்த ஒரு திங்களாக, மாற்றுக்கட்சிப் பேச்சாளர்களுக்கு அது சுவைமிகு தீனியாகி வருகிறது.

கிருஸ்துமஸ் தீவில் அமெரிக்கா அழிவுக் கருவி யைப் பரீட்சை பார்த்ததையும், ஜபருல்லாகான்—கிருஷ்ணமேனன் காஷ்மீர் குறித்து நடாத்திய ஐ. நா. சபை விவாதத்தையும், மொராஜி தேசாயின் புதிய வரி களின் விளைவுகளைப்பற்றியும், T. T. கிருஷ்ணமாச்சாரி யார் துறவறத்தைத் துறப்பதுபற்றியும், பேசிக்கொண் டிருக்கவேண்டிய நேரத்தில், ஒவ்வொருநாளும் மாற்றுக் கட்சிகளின் மேடையில், கேட்கப்படும் ஒரே பிரச்சினை, இராஜ்ய சபையிலே பேசியபோது...என்பதுதான். இன்னும் ஓயவில்லை. ஓயாது. ஓய்ந்துவிட்டால், எனக்கே மனநிம்மதி இருக்காது.

ஏசிக்கொண்டிருப்பவர்கள், தங்கள் மன எரிச் சலைப் போக்கிக்கொள்ள இதுதான் வழி என்று நினைக் கிறார்கள். அப்படித்தான் தோன்றும். இயல்பு அது. சொறி பிடித்தவனுக்கு எப்படி கீறிக்கொள்ளக் கீறிக் கொள்ள, நிம்மதியாக இருப்பது போலத்தெரிந்து பிறகு எரிச்சல் அதிகமாகுமோ அதுபோலத்தான். அதிலும் பொச்சரிப்புக்கொண்ட மனமாகிவிட்டால். அடே அப்பா, குரங்குப்புண் கதைதான்.

விடாமல் தாக்கவேண்டும், ஒவ்வொருநாளும் தாக்க வேண்டும், தடித்த வார்த்தைகளை உமிழவேண்டும், எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசவேண்டும், எல் லாம் எனக்குத் தெரியும் என்ற 'போஸ்' கொடுத்துப் பேசவேண்டும், என்ற முறையில் 'இராஜ்யசபை'ப் பேச் சைப்பற்றி—இவர்கள் இங்கு பேசப்பேச, பொதுமக்கள் மனநிலை என்ன ஆகிறது தெரியுமா, தம்பி! ஒரு நாள் அவன் பேசினான், எல்லோரும் கூடிக்கொண்டு ஓயாமல் அதுபற்றியே பேசிக்கொண்டிருக்கிறார்களே, காரணம் என்ன? அந்த ஒருநாள் பேச்சு, இவ்வளவு பேர்களையும், உலுக்கிவிட்டிருக்கிறதுபோலும், குலுக்கிவிட்டிருக்கிறது

போதும். இல்லையென்றால், இதற்காக இவர்கள் இவ்வளவு 'மல்லு' கட்டிக்கொண்டு, மாரடிப்பானேன் என்றுதான் பொதுமக்கள் கருதுகிறார்கள்.

அதிலும், இன்று எரிச்சலால் இழிமொழி பேசும் பேர்வழிகள், இந்தத் திருத்தொண்டினை இப்போதுதான் முதல்முறையாகச் செய்கிறார்கள் என்றாலாவது, கேட்பவர்களுக்குத் திகைப்பு ஏற்படும்—இதென்ன எல்லோரும் எதிர்த்துப்பேசுகிறார்களே என்று.

இது இவர்கள் நமக்குப்படைக்கும் நித்திய நைவேத்தியம்!—எனவே எப்போதும் ஏசிப்பேசுகிறவர்கள், இப்போது இதை வைத்துக்கொண்டு ஏசுகிறார்கள்-வழக்கமானவேலை-செய்து தீரவேண்டியவேலை!! என்று எண்ணுகிறார்கள்.

அணுகுண்டு வெடித்தார்களாம் என்று முதல் தடவை கேள்விப்பட்டபோது, உலகில் பலநாள், அது பற்றியேதானே பேசிக்கொண்டிருந்தார்கள்—அவரவர்களின் மனப் பக்குவம், விருப்பு வெறுப்பு ஆகியவற்றுக்கு ஏற்ற முறையில்.

உலகைச் சுற்றும் செயற்கைக் கோள் கிளம்பிற்று — எல்லோரும் அதுபற்றியே விடாமல் பேசலாயினர்.

நாய்க்குட்டியை வானவெளிக்கு அனுப்பினர் — எல்லோரும் அதுபற்றியே பேசலாயினர்.

மனிதர்களே வானவெளிப் பயணம் செய்தனர்— எங்கும் எவரும் அதுபற்றியே பேசலாயினர்.

ஆதரித்தோ எதிர்த்தோ, விளங்கிக்கொண்டோ விளங்கிக்கொள்ளாமலோ, இவைபற்றியே அனைவரும் பேசினர் அல்லவா, அதுபோல, மே முதல்நாள் இராஜ்ய சபையில் நான் பேசிய பேச்சு, அரசியல் வட்டாரத்தில் அதிர்ச்சி தரத்தக்க, அலசிப் பார்க்கத்தக்க, தாக்கித் தீர்க்கத்தக்க, விளக்கிக் காட்டத்தக்க பிரச்சினையாக்கப் பட்டு விட்டிருக்கிறதே, இதனைவிடச் சான்று வேறு வேண்டுமா, நாம் கேட்கும் 'திராவிட நாடு' கொள்கையின் பெருமையினை விளக்க. நன்றி கூறிக்கொள்கிறேன், மாற்றார்களின் மகத்தான தொண்டு தரும் பயனுக்காக. நான், உள்ளபடி, இவ்வளவு 'கவனிப்பு' என் பேச்சுக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. புதிய அரசியல் தத்துவப் பிரசவ வேதனையைக்கூட மறந்துவிட்டு, என் பேச்சிலே உள்ள எழுத்துக்கள், புள்ளிகள், வளைவுகள் ஆகியவற்றை ஆராய்ந்து அதன் மூலம் கிடைத்த 'கண்டுபிடிப்பு' காணீர் என்று, மக்களிடம் காட்டுவோரும்; எஃகுத் தொழிற்சாலை சேலத்தில் எப்போது துவக்கப்படும் என்ற பேச்சு, தமது இலாகா என்றாலும், அதனைக்கூட இண்டாவது வரிசைக்கு விட்டுவிட்டு, என் பேச்சு, பற்றிய தமது ஆழ்ந்த கருத்துரையை அள்ளித் தந்து, எம்மால் எளிதாக முடியக்கூடியது இது, எஃகுத் தொழிற்கூடம் அல்ல, என்பதனைக் கூறுமற் கூறுவோரும், புதுவரி எதிர்ப்பு விலைவாசிக் குறைப்புப் போன்றவைகளைக் கவனிக்காதது ஏன் என்று மக்கள் தம்மைப் பார்த்துக் கேட்காதபடி பாதுகாப்புத் தேடிக் கொள்ளச் சிறந்த வழி, என் பேச்சுப்பற்றி ஏசிப் பேசுவதுதான் என்று யூகமுடன் பேசிக்கிடப்போரும், ஆமாம் தம்பி! இப்படிப்பட்ட வகையினர் அடைந்துள்ள அதிர்ச்சியைக் காணும்போதுதான், பரவாயில்லை, இராஜ்ய சபை சென்று பேசியது, நல்ல பலனைக் கொடுத்திருக்கிறது — பிரச்சினைக்குச் சூடும் ஏறுகிறது சுவையும் கூடுகிறது என்ற எண்ணம் உறுதிப்பட்டது.

'திராவிடநாடு' திட்டம் குறித்து நாம் பேசத் தொடங்கியதிலிருந்து இதுவரை, இந்த அளவு, ஒரே நேரத்தில், இந்திய துணைக்கண்டத்திலுள்ள எல்லா இதழ்களும், இங்குள்ள எல்லா மாற்றுக் கட்சியினரும், ஒருசேர, திராவிட நாடு பிரச்சினை குறித்து எழுத, பேச, ஆராய, அலச, தாக்க, முன்வந்தது இல்லை, என்பதை எண்ணும்போது, பிரச்சினை எத்தனை பெரிய அளவு ஒரே நாளில் வளர்ந்துவிட்டது என்பது புரிகிறது; மனம் களிநடமிடுகிறது.

இந்து
மெயில்
சுதேசமித்திரன்
எக்ஸ்பிரஸ்
தினமணி
டைம்ஸ் ஆப் இந்தியா
ஸ்டேட்ஸ்மென்
இந்துஸ்தான் டைம்ஸ்

போ, தம்பி! எத்தனையென்று பெயர்களைச் சொல்வது. எல்லா இதழ்களிலும், 'திராவிடநாடு'தானே! கண்டனம் கிண்டல், படம், தலையங்கம், கேள்வி, இப்படிப் பலப்பல.

நானறிந்த வரையில் சமீபகாலத்தில், இத்தனை பெரிய பரபரப்பு, வேறு எந்தப் பிரச்சினைக்கும் கிடைத்ததில்லை.

ஆயிரம் நூற்றட்டும் தம்பி! அவர்கள், நமது பிரச்சினையை இந்த அளவு, வடிவம்கொள்ளத் துணைபுரிந்ததற்கு, நன்றிகூறத்தான் வேண்டும்.

ஆழ்ந்த நம்பிக்கையுடனும், தூயநோக்குடனும் நாம் ஆற்றிவரும் பணி, ஆபாசப்பேச்சு, இழிமொழி, பழிச்சொல், தாக்குதல் ஆகியவைகளால் பாழ்படாது — அலட்சியப்படுத்தினால்தான், பாழ்பட்டுவிடும்.

நமக்கு அந்தப் பயம் எழவிடாமல், செய்துள்ளவர்கள் மாற்றார்கள் என்று தம்மை அழைத்துக்கொண்டாலும், தம்மையும் அறியாமல் நமக்கு உற்ற நண்பர்களாகின்றனர்.

❋

நான் திராவிட இனத்தைச் சேர்ந்தவன்.

நான் திராவிடன் என்று கூறிக் கொள் வதில் பெருமை அடைகிறேன்.

திராவிடக் கலாசாரம் தனித் தன்மை வாய்ந்தது.

உலகுக்கு அந்தக் கலாசாரத்தை எமது பங்காகத் தர விழைகிறோம்.

பிரிவினை கேட்கும் நாங்கள் மற்றவர் களைப் பகைக்கவில்லை.

திராவிடநாடு பிரிவினையால் பாகிஸ்தான் பிரிவினையின்போது ஏற்பட்ட பயங்கர விளைவுகள் ஏற்பட்டுவிடாது.

தம்பி! இந்தக் கருத்துக்களை எடுத்துக்கூறும் முதல் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததை நான் என் வாழ் நாளிலே கிடைத்த பெரும்பேருகக் கருதுகிறேன்.

அங்கு அவ்விதம் பேசியது மிகப்பெரிய, அதிர்ச்சி தரத்தக்கது என்பதனுல்தான், ஒரு திங்களுக்கு மேலாக, ஒவ்வொரு அரசியல்வாதியும் இது குறித்தே பேசிக் கொண்டுள்ளனர்.

திராவிடநாடு குறித்து நான் அங்கு பேசினேன் என்ருல், அந்தப் பிரச்சினை குறித்து ஒரு விவாதம் இராஜ்ய சபையில் ஏற்பாடாயிற்று என்று பொருள் அல்ல.

குடி அரசுத் தலைவர், தமது உரையிலே, நாட்டு நிலை, ஆட்சி நிலை, மக்களாட்சி முறையின் நிலைமை, தேசிய ஒற்றுமைப் பிரச்சினை, சமதர்மம், போன்றவை பற்றித் தமது கருத்தினைத் தெரிவித்திருந்தார்; அதை யொட்டி உறுப்பினர்கள் தமது கருத்துகளை எடுத்துக் கூறும் கட்டம் அது.

குடி அரசுத் தலைவர் உரையிலே, நான் கண்ட மூன்று அடிப்படைப் பிரச்சினைகள்,

மக்களாட்சி முறை
சமதர்ம திட்டம்
தேசிய ஒற்றுமை

என்பனவாகும்.

இம்மூன்று பிரச்சினைகள் குறித்தும், என் கருத்து களை எடுத்துக் கூறுவதே, என் பேச்சின் அமைப் பாக்கிக்கொண்டேன்.

குடிஅரசுத் தலைவர் தமது உரையில் தேசிய ஒற்றுமை குறித்துப் பேசியிராவிட்டால், நான், திராவிட நாடு பிரச்சினைபற்றி வலிந்து இணைத்துத்தான் பேசி யிருக்க நேரிட்டிருக்கும். பொருத்தம்தானு என்று பலர் கேட்க நேரிட்டிருக்கும். எனக்கும், வேண்டுமென்றே புகுத்திப் பேசுவது, வலிந்து இணைத்துப் பேசுவது, பிடிப்பதில்லை. ஆனல் குடிஅரசுத் தலைவர், தேசிய ஒற்றுமைபற்றிக் குறிப்பிட்டிருந்ததால், அவர் கருதும் தேசியத்தைப் பற்றியும், நாம் கோரும் திராவிடப் பிரிவினை பற்றியும் எடுத்துக்கூறப் பொருத்தம் கிடைத்தது.

இந்த வாய்ப்பு, நான் இரயில்வே வரவு செலவு திட்டம் குறித்தோ, நீர்ப்பாசனம் பற்றியோ, எஃகுத் தொழிற்சாலை பற்றியோ பேச முற்பட்டிருந்தால் கிடைக்காது.

அந்த நேரங்களில், தென்னடு புறக்கணிக்கப்பட்டி ருப்பது பற்றிப் பேசலாம், ஓரவஞ்சனை ஆகாது என்பது பற்றிப் பேசலாம், அதனுடைய தொடர்ச்சியாக வலிய இழுத்துவந்து ஒட்டவைத்துக் கொள்வதுபோல,

இப்படியெல்லாம் செய்தால், நாங்கள் பிரிந்துபோய்விடுவோம்.

இப்படியெல்லாம் செய்வதால்தான் நாங் கள் பிரிவினை கேட்கிறோம்.

நாங்கள் பிரிந்து தனியாக இருந்தால் இந்தச் சங்கடமும் சிக்கலும் எமக்கு ஏற் படாது;

என்று இந்த முறையிலே, சற்றுச் சுற்றிவளைத்துப் பேச வேண்டி ஏற்பட்டிருக்கும்.

நல்லவேளையாகக் குடிஅரசுத் தலைவர் தமது உரை யிலே, 'தேசியம்' பற்றிப் பேசினர்—எனவே, திராவிடம் பற்றி எடுத்துரைக்க எனக்குப் பொருத்தமான வாய்ப்புக் கிடைத்தது.

வேறு ஏதேனும் துறை பற்றிய பிரச்சினைமீது பேசும்போது, வலியத் திராவிடநாடு பிரிவினைபற்றிப் பேசினல், பொருத்தமற்ற பேச்சு என்று அவைத் தலைவரேகூடத் தடுத்து நிறுத்திவிட முடியும்.

இவைகளை எண்ணிப் பார்த்துத்தான், முதலில் இம்முறை பேசத் தேவையில்லை என்று எண்ணிக் கொண்டிருந்த நான், குடிஅரசுத் தலைவர் உரைமீது பேசினல்தான், பொருத்தமான முறையில், திராவிடநாடு பற்றிப் பேச வசதியாக இருக்கும் என்று முடிவுசெய்து, பேசும் வாய்ப்புக்காக எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன்.

மே முதல் நாள் காலை பேசும் வாய்ப்புத் தரப்பட் டிருக்கிறது என்று எனக்கு அறிவிக்கப்பட்டது.

முன்னள் இரவு, மாடியில் வெட்டவெளியில் படுத்த படி, நாம், எங்கிருந்து புறப்பட்டு எங்கு வந்திருக்கிறோம், எங்கெங்கெல்லாம் பேசியிருக்கிறோம் நாளை எங்கு பேசப்போகிறோம், இங்கு திராவிடநாடு பற்றிப் பேசும் வாய்ப்புப் பெறும் அளவு கழகம் பதின்மூன்றே ஆண்டு களிலே வளர்ந்திருக்கிறதல்லவா? என்றெல்லாம், எண்ணியபடி படுத்துக்கிடந்தேன்.

மேஜைமீது பல புத்தகங்கள், விளக்கொளி பளிச் சென்று; ஆனல் படிக்கக்கூடத் தோன்றவில்லை, நினைத்து நினைத்து மகிழத்தான் தோன்றிற்று.

இத்தனை வளர்ச்சிக்கும் காரணமாக உள்ள நீயோ, நெடுந்தொலைவில். நான் சாம்ராஜ்யங்களின் சவக்குழிகள் நிரம்பிய புதுதில்லி நகரில், காங்கிரஸ் ஏகாதிபத்தியத் தின் அடித்தளம் என்று கூறத்தக்க பாரத ஒற்றுமை எனும் ஏற்பாட்டுக்கு எதிர்ப்பானது என்று கருதுவோ ரால், மிகப் பலமாகத் தாக்கப்பட்டுவரும், நாட்டுப் பிரிவினைபற்றி, நாளை அரசு அவையில் பேசும் வாய்ப்புக்

கிடைத்தது குறித்த எண்ணத்தை அணைத்தபடி உறங்க லானேன்.

வடக்கு வீதியில் 116-ம் எண் உள்ள கட்டிட மாடியில் நான் படுத்திருக்கிறேன்.

எதிர்ப்புற வரிசையில் மனேகரனும், இராஜாராமும், சிவசங்கரனும், செழியனும்.

தெற்கு வீதியில், அரூர் முத்து, கடலூர் இராம பத்திரன்!

வடக்கு வீதி 116-ம் எண் கட்டிடம், தருமலிங்கத்தின் வீடு.

இரவு நெடுநேரமாகியும் புழுக்கம் குறையவில்லை. தில்லி வெயிலின் கொடுமையைவிட, அதன் தொடர்பாகவும் விளைவாகவும் கிளம்பும் வறட்சி உண்டே, அது எனக்கு மிகுந்த வேதனையைத் தந்தது.

தமிழகத்தைவிட்டுக் கிளம்பிப் பதினைந்து நாட்களுக்கு மேலாகிவிட்டன—என் எண்ணம் அவ்வளவும் தமிழகத்திலே நமது கழகப்பணி எந்த நிலையில் இருக்கிறதோ என்பதுபற்றியேதான்.

தொடர்ந்து பதினைந்து நாட்கள் (சிறையில் கிடக்கும்போது தவிர) இயக்கப்பணிக்காகத் தோழர்களிடம் தொடர்பு கொள்ளும் காரியமாற்ருது இருந்து பழக்கம் இல்லை; பிடிக்கவும் இல்லை. தம்பி கருணாநிதிக்கு எழுதிய கடிதத்திலே இதைக் குறிப்பிட்டிருந்தேன். பேசும் வாய்ப்புக் கிடைத்ததும் பேசிவிட்டு உடனே ஊர் திரும்புகிறேன் என்று எழுதினேன்.

அதுபோலவே, மே முதல் நாள் பேசியானதும் புறப்படத் திட்டமிட்டுக் கருணாநிதிக்குத் தெரிவித்தேன்—மூன்றும் தேதி கூட்ட ஏற்பாடும் தில்லியிலிருந்தபடியே செய்யப்பட்டது—ஆறும் நாள் மதுரை, ஏழாம் நாள் திருப்பத்தூர் நிகழ்ச்சிகள், தில்லி போகுமுன்பே ஏற்பாடு செய்யப்பட்டவைகள். இவைபற்றிய எண்ணம் எனக்கு மேலோங்கியபடி இருந்தது. ஆனல், இரயிலில் இடம் கிடைக்கவில்லை; விமானத்திலும் நாலாம் தேதி வரையில் இடம் கிடையாது என்று ஆகிவிட்டது; முதல் நாள் இரவு விமானத்திலேதான் இடம் கிடைக்கும் என்ற செய்தி விமான நிலையத்தார் அனுப்பினர். அதுவும், வருவதாக இருப்பவர்களில் எவரேனும் வரவில்லை என்ருல்!

இந்த என் சங்கடத்தைக் கண்ட, கம்யூனிஸ்டு நண்பர் இராமமூர்த்தி தனக்கென்று முதல் நாள் இரவு விமானத்தில் இடம் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும், தான் இரயிலில் போகப்போவதால், அந்த இடத்தை எனக்குத் தரலாம் என்று விமான நிலையத்தாருக்குக் கடிதம் கொடுப்பதாகவும் தெரிவித்துக் கடிதமும் கொடுத்தார். நான் இராஜ்ய சபையில் பேசும்போது அந்தக் கடிதம் என் சட்டைப் பையில் இருந்தது.

மக்கள் சபையாகட்டும் இராஜ்யசபையாகட்டும், அல்லது சட்டசபைகளாகட்டும், வழக்கு மன்றங்கள் அல்ல.

அங்கு பலரும் வழக்கினை எடுத்துரைப்பதுபோலத் தத்தமக்குச் சரியென்றுபட்ட கருத்துகளை ஒழுங்கு முறைப்படி எடுத்துக்கூறுவர். ஆனல் வாதங்களைக் கேட்டு இருதரப்புக் கருத்துகளையும் கேட்டுத் தீர்ப்பு அளிக்க ஒருவர் அங்கு கிடையாது.

தீர்ப்பு என்று எதையாவது கூறுவது என்ருல், ஓட்டெடுப்பினைத்தான் குறிப்பிடலாம்; அந்த ஓட்டெடுப்பு, கட்சிகளின் எண்ணிக்கை பலத்தைப் பொறுத்தது என்பது அரசியல் அரிச்சுவடி–விளக்கத் தேவையில்லை. மக்கள் சபையில் நமக்கு 7 ஓட்டுகள். இராஜ்ய சபையிலே ஒன்று!!

ஏன் இதனைக் கூறுகிறேன் என்ருல், சிலர் இங்கு, நான் ஏதோ தில்லிக்கு வழக்காடச் சென்று, வழக்காடி, என் வாதங்கள் ஏற்றுக்கொள்ளப்படாமல், வழக்குத் தோற்றுவிட்டதுபோல ஒரு பேச்சுப் பேசுகிருர்களே, அது எவ்வளவு பொருளற்றது என்பதை எடுத்துக் காட்டத்தான்.

சட்டமன்றங்களிலே எடுத்துப்பேசும் போக்கு, அளிக்கப்படும் ஆதாரம், காட்டப்படும் காரணம், இவைகளால், சட்டமன்றத்திலே மட்டுமல்லாமல், பொது மக்களிடம் எத்தகைய எண்ணம் ஏற்படுகிறது என்பதுதான் முக்கியமானது.

எந்தச் சட்டமன்றத்திலும் அநேகமாக, ஆளுங்கட்சி கொண்டுள்ள கருத்துக்கு மாருன கருத்தினையோ, மேற்கொண்டுள்ள திட்டத்துக்கு மாருன திட்டத்தையோ, எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்று கூடித் தனித்திறமை காட்டி எதிர்த்துப் பேசினுலும், ஓட்டெடுப்பு நடக்கும்போது தீர்ப்பு ஆளுங்கட்சிக்குச் சாதகமாகத்தான் அமையும்; ஆளுங்கட்சிக்கு மாருகத் தீர்ப்புக் கிடைத்தால், அநேகமாக ஆட்சி மாறவேண்டி நேரிடும். ஒவ்வொரு சட்டமன்றத்திலும் எதிர்க்கட்சிகள் ஆளுங்கட்சிக்கு எதிர்ப்பான முறையில் வாதிடும் போது, நிச்சயம் தீர்ப்புத் தமக்குச் சாதகமாகக் கிடைக்காது என்று முன்கூட்டியே தெரிந்துதான் பேசுகின்றன; நடவடிக்கைகளிலே கலந்துகொள்கின்றன.

இதுதான் முறை என்பது தெரிந்திருக்கும்போது, அண்ணதுரையின் பேச்சு ஏற்றுக்கொள்ளப்படவில்லை, ஏகப்பட்ட எதிர்ப்புக் கிளம்பிற்று, கோரிக்கை நிராகரிக்கப்பட்டுவிட்டது, வழக்காடித் தோற்றுப்போனுன் என்றெல்லாம் சிலர் பேசுவதும் எழுதுவதும், அவர்தம் சிறுமதியைக் காட்டுகிறது என்று கூறுவதற்கில்லை, அவர்களிலே பலர் மெத்தப் படித்தவர்கள்; ஆனல் மக்கள் அப்பாவிகள் என்று அவர்கள் எண்ணிக்கொள்வதாலேயே, அவ்விதம் பேசுகிருர்கள். அவர்தம் போக்குக்கு அதுதான் காரணம்.

தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கும் இராஜ்யசபை நடவடிக்கைகளிலே, ஒரு நிகழ்ச்சியாக, என் பேச்சை அவர்கள் கொள்ளாமல், திராவிடநாடு உண்டா இல்லையா? இரண்டில் ஒன்று கூறிவிடுங்கள் என்று கேட்பதற்காகக் கூட்டப்பட்ட, தனி அவையில், நான் கடைசி முறையாகப் பேசிவிட்டுக் காரியம் பலிக்கவில்லை என்று கைபிசைந்துகொண்டும் கண்களைக் கசக்கிக்கொண்டும் வீடு திரும்பிவிட்டதுபோலச் சித்தரித்துக் காட்டி, இராஜ்ய சபையிலே எழுப்பப்பட்ட பிரச்சினை கண்டு அதிர்ச்சி அடைந்துள்ள தமது கட்சித் தோழர்களுக்கு, மிட்டாய் தந்து பார்க்கிருர்கள்.

நடைபெற்றது. குடிஅரசுத் தலைவர் உரைமீது விவாதம். அதிலே நான் என் கருத்தினைக் கூறினேன், திராவிடநாடு பிரிவினை ஏற்பட்டால்தான் உண்மையான தேசியம் நிலைக்கும் என்று எடுத்துரைத்தேன்—அவையினர் கேட்டனர்—அவர்களிலே நான் தவிர மற்றவர்கள் நாட்டுப் பிரிவினையை ஏற்றுக்கொள்ளாத கட்சியினர்—எனவே என் பேச்சை மறுத்துப் பேசித் தமது கட்சிக் கொள்கைகளை விளக்கினர்.

பிரிவினை கிடையாது

பிரிவினை கேட்க இவன் யார்?

பிரிவினைப் பேச்சு ஆபத்தானது.

பிரிவினைப் பேச்சு சட்டவிரோதமானது.

பிரிவினை பேசுவதைச் சட்டவிரோதமாக்கவேண்டும்.

என்று இப்படியெல்லாம் பேசினார்கள்.

இவர்களில் ஒருவர்கூட, ஏற்கெனவே இந்தக் கருத்தைக் கொள்ளாமல், இப்படியா அப்படியா என்று இருந்து வருபவர்கள் அல்ல. நாடறிந்தவர்கள்—நமது கொள்கையை மறுப்பவர்கள். அவர்கள் என்ன பதில் அளிப்பார்கள் என்பது அவர்கள் உள்ள கட்சிகள் கொண்டுள்ள கொள்கைகளிலிருந்தே விளக்கமாகிறது, எவருக்கும். எல்லாம் அகில இந்தியக் கட்சிகள்! நிலைமை இது. இங்கு சிலர் பேசிக்கொள்வதோ, அண்ணாத்துரை பேச்சை நிராகரித்துவிட்டனர் என்பது!

திராவிடநாடு தருக! என்று நான் கேட்டதும், அனைவரும் எழுந்திருந்து, தந்தோம்! தந்தோம்! என்று கூறிவிடுவார்கள் என்று எதிர்பார்த்தா நான் பேசினேன்!—அவ்வளவு ஏமாளியா நான்!!

இராஜ்யசபை அமைந்த நாள்தொட்டு, அங்கு திராவிட நாடு பிரிவினைப் பிரச்சினை எழுப்பப்பட்டதில்லை. நாம் எழுப்புவோம். நானிலம், இப்படி ஒரு பிரச்சினை இருக்கிறது என்பதனை உணரட்டும், என்பதல்லவா என் நோக்கம். அதிலே தோல்வி கண்டுவிட்டோமா? இல்லையே!! நாடே கொதிக்கிறதே! நாள்தோறும் மேடை அதிரப் பேசுகிறார்களே!!

நான் எதிர்பார்த்தது எதுவோ, அது நான் கிடைக்கும் என்று கணக்கிட்டதைவிட அதிக அளவிலேயே கிடைத்துவிட்டது.

என் பேச்சுக்குப் பிறகு இராஜ்யசபையிலே நடைபெற்ற விவாதம், குடிஅரசுத் தலைவர் உரைமீது நடப்பதாகத் தோன்றவில்லை, அண்ணாதுரை பேச்சுமீது எழும்பிய விவாதமாகத் தோன்றலாயிற்று, என்று இந்து இதழ் எழுதிற்று.

இருட்டடிப்புக்கு ஆளாகிக் கிடந்த பிரச்சினை இன்று எங்கும் கவனிக்கப்படும் பிரச்சினையாகிவிட்டது.

வெட்ட வெளியிலே பேசப்படும் பிரச்சினை சட்டசபைக்கும் வந்துவிட்டதா? என்று முன்பு அங்கலாய்த்துக்கொண்டவர்கள், சட்டசபையில் பேசப்பட்டுவந்த பிரச்சினை இராஜ்ய சபைக்கும் வந்துவிட்டதே என்று எண்ணுகிறார்கள்—ஏக்கத்துடன்—எரிச்சலுடன்.

அதுவும் எப்போது? இந்தப் பொதுத் தேர்தலிலே, கழகம் அழிந்துபோகும், நாதியற்றுப் போய்விடும்,பிறகு பிரிவினைச் சக்தியை ஒழிக்கத் தனி முயற்சி எடுக்க வேண்டிய தேவையே இராது என்று பண்டித நேருவுக்கு, மதுரையிலே காமராசர் வாக்குறுதி தந்த பிறகு.

திராவிட முன்னேற்றக் கழகமே ஒழிந்துவிடும் — ஒழித்துக் கட்டப்போகிறோம் என்று முழக்கமிட்டார் தமிழக முதலமைச்சர். அதற்குப் பிறகு, திராவிடநாடு திராவிடருக்கே என்ற முழக்கம் இராஜ்ய சபையிலேயே எழுப்பப்பட்டிருக்கிறது.

பொருள் விளங்குகிறதா, தம்பி. காங்கிரசாருக்கு நன்றாக விளங்குகிறது. அதனால்தான் ஆத்திரம் பொங்கி வழிகிறது.

பணபலமோ பத்திரிகை பலமோ அற்ற ஒரு கட்சி. தேசியத் தாட்கள் அவ்வளவும் தாக்கியபடி உள்ளன அந்தக் கட்சியை. அந்தக் கட்சியின் தலைவர்களை,

கூத்தாடிகள்

கூவிக் கிடப்போர்

கூலிகள்—காலிகள்

பணக்காரனுக்குக் கையாட்கள்

பார்ப்பனருக்குத் தாசர்கள்

பகற்கொள்ளைக்காரர்கள் — பண்பற்றவர்கள்.

அப்பாவிகள்—அக்ரமம் செய்வோர்.

ஒன்றை ஒன்று அடித்துக்கொள்ளும் பேர்வழிகள்.

என்று கேட்கக் கூசிடும் இழிமொழிகளால், தாக்கியபடி இருக்கிறோம். வாழ்த்தி வணங்கினவர்களைக்கொண்டே, வசைபாட வைத்திருக்கிறோம். கூடிக் குலாவினவர்களே குழிபறிக்கக் கண்டோம். அண்ணா ஒரு தனி ஆள் அல்ல, அவர் ஒரு அமைப்பு என்று அர்ச்சித்து ஆலவட்டம் சுற்றி ஆரத்தி எடுத்தவர்களே, அவனுக்கு அரசியலே தெரியாதே, முதுகெலும்பே கிடையாதே என்றெல்லாம் ஏசிடும் நிலை ஏற்பட்டது. கழகம் கலகலத்தது, வீரனும் விவேகியும், தீரனும் சூரனும் கழகத்தைவிட்டு வெளியேறிவிட்டார்கள் என்று ஓராண்டுக் காலத்துக்கு மேலாகச் செய்திகள் கிளம்பிய வண்ணம் இருந்தன. இப்படி இடிபட்டபடி இருந்துவந்த கழகம், எப்படி ஐயா! திராவிடநாடு பற்றிய முழக்கத்தை இராஜ்ய சபையில் எழுப்பும் அளவுக்கு வளர்ந்துவிட முடிந்தது என்ற கேள்வி பிறக்கும்போது, நமது கழகம் அழிந்துபோகும் என்று ஆரூடம் கணித்தவர்கள் முகத்தில் அசடு வழியாமலா இருக்கும்; ஆர்ப்பரித்துத் தமது எரிச்சலைக் காட்டிக்கொள்ளாமலா இருப்பார்கள்.

வால்ட் டிசனியின் கருத்தமைந்த சில கார்ட்டூன் படங்களிலே பார்க்கலாம் தம்பி, கோழியைக் கொன்று தின்றிட நரி கிளம்பும்; தந்திரம், வஞ்சகம் நரிக்கு நிரம்ப அல்லவா? கோழி சிக்கிக்கொண்டது என்று நாம் நினைக்கும்விதமான நிலைமை ஏற்பட்டுவிடும், ஆனால்

திடீரென்று கோழிக்காக வைத்த பொறியிலே நரி சிக்கிக்கொள்ளும், கோழி தன் குஞ்சுகளுடன் கெம்பீரமாகச் செல்லும்.

காங்கிரசும் கழகத்தை ஒழித்துக்கட்ட, ஓயாமல் திட்டமிட்டுத் திட்டமிட்டு, கழகம் அழிந்துபோய்விடும் என்று பலரும் எண்ணும் நிலை பிறந்து, பிறகோ நிலை மாறி, கழகத்தின் செல்வாக்கு வளர்ந்து காங்கிரசின் முகம் கருத்துவிட்ட காட்சி காண்கிறோம். மீசையில் மண் ஒட்டவில்லை என்று பேசும் முறையிலே, காங்கிரஸ் தலைவர்கள் பேசிக்கொள்ளலாமே தவிர, எந்தக் கழகத்தை ஒழிக்கக் காங்கிரஸ் கடுமையாக வேலை செய்ததோ, அந்தக் **கழகத்தின் முழக்கம் கல்லறை மைதானத்திலே தொடங்கி, இப்போது ஏகாதிபத்தியங்களின் கல்லறைகள் நிரம்பிக் கிடக்கும் தில்லியில், அரசு அவையிலே எழுப்பப்பட்டாகிவிட்டது.**

இது துடுக்குத்தனம்—தேசத் துரோகம்—இதற்கு என்ன தண்டனை தெரியுமா? என்று உருட்டி மிரட்டிப் பேசிப்பார்க்கிறார்கள், ஊராள்கிறோம் என்ற துணிவால். அவர்கட்கெல்லாம், நான் ஒன்று கூறிக்கொள்வேன், தம்பி! விடுதலைக்காகப் போரிடக்கிளம்பும் எவரும்—போரிடக் கிளம்புவேன் என்று முழக்கமிடும் போலிகள் அல்ல—வாய்க்கரிசி போட்டுக்கொண்டுதான், அந்தக் காரியத்தில் ஈடுபடுகிறார்கள். எனவே, என்ன நடக்கும் தெரியுமா? என்று மிரட்டுவதிலே பொருள் இல்லை. முத்துக்குளிப்போனிடம் சென்று ஐயோ! தண்ணீருக்குள் இறங்கினால், நீர்கோர்த்துக் கொள்ளுமே, காய்ச்சல் வருமே என்று கூறும் அப்பாவிபோலவும், வேட்டைக்குக் கிளம்புவோனிடம் சென்று, அடவிக்கா செல்கிறாய், முள் தைக்குமே காலில் என்று பேசிடும் பேதை போலவும், விடுதலைபெறப் பாடுபடுவது என்ற உறுதிகொண்டு விட்டவர்களிடம், தண்டனை என்ன தரப்படும் தெரியுமா என்று இந்த மேதைகள் பேசுவது?

திடுக்கிட்டுப் போன நிலையில் பாவம், அவர்கள் சூடாகப் பேசுகிறார்கள்.

அந்தச் சூடு சுவையும் தருகிறது—நமக்கு—ஏனெனில் நமது வளர்ச்சியை மாற்றார்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை என்பது அவர்களின் சூடான பேச்சினால் விளக்கமாக்கப்படுகிறதல்லவா, அதனால்.

அண்ணன்,



நன்னாள்

[இராசு]

அன்னப் பறவை அசைந்துஅசைந்து அழகுற நடந்து வருவதைக் கண்டான். ஆனால் அதன் அழகு அவனை அயரவைக்கவில்லை.

குயிலின் கூவும் குரலைக் கேட்டான். ஆனால் அவன் அதைப் பொருட்படுத்தவில்லை.

காகங்கள் கறுப்பாயிருப்பதைக் கண்டான்; அக்கறுப்பிலும் அவனுக்கு வெறுப்பு ஏற்படவில்லை.

எத்தனையோ மிருகங்களைக் கண்டான். எவ்வளவோ மலைகள்; எண்ணற்ற பறவைகள்; எழுச்சியூட்டும் இயற்கைக் காட்சிகள்; ஆறுகள்; அதனால் அடித்துக்கொண்டு போகும் பொருள்கள்; மலைகள்; மலைமேலும் வளர்ந்திருக்கும் மலைக்குத் தக்க ஆலமரங்கள்; இன்னும் பல! ஏனென்று கேட்பார் இலர்.

பசித்தால். . . . எதிரில் கண்ட மிருகங்களையடித்துப் புசிப்பான்; இவன் மிருகத்திற்கும் இரையாவான்; மிருகம் இவனுக்கும் இரையாகும்; உடையில்லை உடலில்.

தெளிவில்லை உள்ளத்தில்; அங்கமெல்லாம் கறுப்பு; அத்தனையும் வைரம் பாய்ந்த உறுப்பு.

வினாடிகள் நிமிடமாயின; நிமிடங்கள் மணியாயின; மணிகள் நாளாயின; நாட்கள் வாரங்களாயின; வாரங்கள் மாதமாயின; திங்கள்கள் ஆண்டாயின; ஆண்டுகள் ஒன்று பத்தாயிற்று; பத்து, நூறு ஆயின; நூறு ஒன்றிரண்டாய் இன்று இருபதை எட்டிப்பிடிக்கத் துள்ளிக்கொண்டிருக்கிறது.

இன்று பெண்களின் நடையை அன்னத்திற் கொப்பிடும் கலைஞர்களும், கவிஞர்களும் வாழ்கிறார்கள்.

குரலைக் குயிலுக்கு ஒப்பிடும் அறிஞர்களும் இருக்கிறார்கள்.

காக்கைபோல் கருவண்ணந் தீட்டிக் கண்ணெதிரே காட்டும் ஓவியர்கள் இருக்கிறார்கள்.

மிருகத்தை யடக்கி மிடுக்கோடு நடக்கும் சர்க்கஸ்காரர்கள் இருக்கிறார்கள்.

பெருமலையைச் சிறு உளியால் சிற்பமாக்கும் சிற்பிகள் வாழ்கிறார்கள்,

ஆறுகளைப் பயன்படுத்துகிறார்கள்; அணைபோட்டு, நீரைத் தடுக்கும் பொறி வல்லுநர்கள் வாழ்கிறார்கள்.

மலைமேல் மண்டிக்கிடக்கும் மூலிகைகளைக் கண்டு, அதைப் பயன்படுத்தும் சித்த வைத்தியர்கள் நிறைந்திருக்கிறார்கள்.

மலைமேல் வளர்ந்திருக்கும் மலை போன்ற மரங்களையும், வெட்டி வீழ்த்தி விலைபேசும் வியாபாரிகள் நிறைந்திருக்கிறார்கள்; மிருகங்களையும் பக்குவப்படுத்திப் பயன்படுத்தும் பழக்கவழக்கமுடையோர் வாழ்கின்றார்கள். உடலில் விதவிதமான உடைகளை அணிந்து மகிழ்கின்றனர்; அழிந்துபோகும் உடலுக்கு அழகு படுத்துகின்றனர்.

அங்கமெல்லாம் கறுப்பாயிருப்பினும், அவற்றிலும் தங்கமுலாம் போன்ற நவீன சாதனங்களைப் பூசி நிறத்தையே மாற்றிக்கொள்கிறார்கள்,

மனிதன் காலத்தைக் கணக்கிட்டுச் செயல்படுகிறான். எனினும் அவன் மூடக் கொள்கைகளை ஒழித்தானில்லை. முன்னேற்றக் கொள்கைகளைக் கடைப்பிடித்தானில்லை.

என்று மனிதன், தன்னை மனிதனாக நடக்கப் பழக்கப்படுத்திக் கொள்கிறானோ, அன்றே மனித இனத்தின் நன்னாள்!

4-ம் பக்கத் தொடர்ச்சி

ஒருநாள் அதிகாலை. என் கட்டில் மீது ஏறினான் என் பியரி. என் அருகில் வந்து முடங்கிப் படுத்துக் கொண்டான். அப்படியே ஆடாமல், அசையாமல் படுத்திருந்தான்; வாய் பேசாமல் படுத்திருந்தான் — சிறிது நேரம். பிறகு திடீரென்று என் காதருகில் வந்தான். "என் அண்ணனை எப்போதம்மா என்னிடம் அழைத்து வருவாய்?" என்று கிசு கிசு வென்று தணிந்த குரலில் கேட்டான்.

உள்ளம் நெக்குருக நிலைகுலைந்து போனேன் நான். என் கைகளால் பியரியை இறுகத் தழுவி அணைத்துக்கொண்டேன். "கிறிஸ்துமஸ் வருகின்றதுபார் பியரி, கிறிஸ்துமஸ், அந்தக் கிறிஸ்துமஸ்சின்போது உன் அண்ணனை உன்னிடம் கொண்டுவந்து சேர்த்துவிடுகிறேன்!"

நான் கொடுத்த அந்த வாக்குறுதியிருக்கின்றதே, அது அஞ்சுதலுக்குரிய பித்தம் நிறைந்த வாக்குறுதி. என்றாலும் அந்த வாக்குறுதியை நான் காப்பாற்றித்தான் தீரவேண்டும். அந்த வாக்குறுதியை நிறைவேற்றும் அளவு நான் வலிமை பெறுதல் வேண்டுமென்று திருவுளத்தை வழுத்துதல் புரிந்து கொண்டேயிருநதேன்.

சில வாரங்களில் அங்கேரியப் புரட்சி கிளர்ந்து வெடித்தது. உடனே நான் ஆஸ்டிரியாவுக்குச் சென்றேன். அங்கேரியிலிருந்து வெளியேறி வரும் அகதிகளுக்கு அங்கே முதல் உதவிப் பணிபுரியும் செஞ்சிலுவைக் கழகத்தாரோடு சேர்ந்து பணியாற்றத் தொடங்கினேன். இரவு, பகல் என்று பாராது பணி புரிந்துகொண்டேயிருந்தேன். என் நாட்டின் — அங்கேரியின் — செய்திகள்பற்றி ஓயாது, ஒழியாது வருவோரிடம் எல்லாம் கேள்விகள் கேட்டுக்கொண்டேயிருந்தேன்.

முற்றும் துணையிழந்தேன்.

திடீரென்று நியுமோனியா காய்ச்சல் பிடித்துக்கொண்டது என்னை. நான் முழுக்க முழுக்கத் துணையற்ற நிலையில் படுக்கையிற் கிடந்தேன். அவ்வேளைதான் எல்லைப்புற நிலைமைகளில் மாற்றங்கள் உண்டாயின். அங்கேரியிலிருந்து தப்பி வெளியேறி வருவது நாளுக்கு நாள் கடினமாகிக் கொண்டு வநதது.

நான் குணம் பெற்றுத் திரும்பி வந்தபோது டிசம்பர் மாதத்தின் நடுப்பகுதியே வந்துவிட்டது. கிறிஸ்துமஸ் நெருங்கி, நெருங்கி, வந்து, வந்து என்னை அச்சுறுத்திக் கொண்டிருந்தது.

டிசம்பர் மாதம் 16-ம் நாள், ஞாயிற்றுக்கிழமை. அன்று டோரா கினுடி என்ற புடாபெஸ்ட் நகர நாட்டிய நடிகையைச் சந்தித்தேன். அவளும் அங்கேரியிலிருந்து தப்பித்தான் ஓடி வந்திருந்தாள். ஆனால் அவள் தன் மகளை அங்கேரியிலேயே கட்டாயமாக விட்டுவிட்டு இங்கு வந்திருந்தாள். நாங்கள் இருவரும் திரும்பவும் அங்கேரிக்குள் போவது என்று தீர்மானித்தோம். எங்கள் குழந்தைகளை மீட்டுக்கொண்டே வந்துவிடுவது என்று முடிவு கட்டினோம்.

நான் பணம் கொடுத்து அடையாளச் சீட்டுப் பெற்றுக்கொண்டேன். அந்த வேளை தேவைப்பட்ட அங்கேரிய நாணயங்களையும் சேகரித்து வைத்துக்கொண்டேன். பிறகு இருவரும் புறப்பட்டோம். ஆஸ்திரிய —அங்கேரிய எல்லையிலுள்ள காட்டுக்குள் நுழைந்து மணிக்கணக்கில் நடந்துகொண்டிருந்தோம். கடைசியாக அங்கேரியை அடைந்தோம். அன்றிரவு மாட்டுத்தொழுவம் ஒன்றில் பொழுதை ஓட்டினோம். அந்த இரவு வேளையில் எங்களைச் சுற்றிலும் வந்து பெருந்தொல்லையளித்த எலிகள்மீது கல்லையெடுத்து எறிய அவ்வபொழுது சரியாக இருந்தது.

மறுநாட் காலை பேருந்து ஒன்றில் ஏறினோம். அதில் தொழிலாளர் கூட்டம் நிறைந்து வழிந்தது. அந்தக் கூட்டத்திடையே நான் எளிதில் மறைந்துகொள்ள முடியுமென்று தான் எதிர்பார்த்தேன். ஆனால், ஐந்தே நிமிடங்களில் பேருந்து நிறுத்தப்பட்டது. ரஷிய காவலாளி ஒருவன் வழிமறித்து நின்றுகொண்டிருந்தான்.

படை வீரன் ஒருவன் எங்கள் அடையாளச்சீட்டுக்களைச்சோதனை போட்டான். வாங்கிச் சோதனை போட்டுவிட்டுத் திரும்பக் கொடுத்தான். சற்று நிம்மதியாக இருந்தது எனக்கு. திடீரென்று அந்தப் படை வீரன் சத்தமிட்டான்: "மாறியிருக்கிறது. அடையாளச்சீட்டு மாறியிருக்கிறது!" என்று. என்னுடன் வந்த டோரா சினுடியின் சீட்டும் அப்படித்தானும். எங்களிருவரையும் லாரியிலிருந்து இறக்கினார்கள். எல்லாவற்றாலும் கைவிடப்பெற்று உலகத்திலேயே தன்னந்தனியாக நிற்பவள் நான் ஒருத்திதான் என்ற எண்ணம் அப்போது எனக்குண்டாயிற்று.

குண்டுகள் பறந்தன

திடீரென்று டோரா ஓட்டம் பிடித்தாள். ஒரு கணம் சுற்றி நின்ற ரஷியப் படைஞர்கள் வியப்படைந்து நின்றார்கள். பிறகு சுடத் தொடங்கினார்கள். குண்டுகள் பறந்தன. டோராவைச் சுற்றிலும் குண்டுகள் பரந்து வீழ்ந்துகொண்டிருந்தன. எனினும் அவள் ஓடினாள். ஓடிக் கொண்டேயிருந்தாள். கால் எல்லாம் தெறித்துவிழும் சேற்றோடு போட்டி போட்டுக்கொண்டு ஓடினாள். இருட்டை நோக்கி ஓடினாள். ஓடி மறைந்தே மறைந்துவிட்டாள் இருட்டுக்குள் அவள்.

சுடுவதுதான் கடைசியில் ஓய்ந்தது. டோரா சென்று மறைந்தவள் மறைந்தவளே!

பிறகு—நெடு நாட்களுக்குப்பிறகு—நான் அறிந்துகொண்டேன் டோரா தன் மகளைக் கண்டுபிடித்துவிட்டாள்; தன் மகளோடு பிறந்த நாடாம் அங்கேரியைவிட்டு கம்யூனிஸ்டு வெறியர்கள் இல்லாத சுதந்தர பூமிக்குத் தப்பியோடி வந்துவிட்டாள் என்ற செய்தியை.

என்னை லாரியில் ஏற்றினார்கள். மோசன் செண்ட்சானுஸ் என்ற நகரத்துக்கு அழைத்துச் சென்றார்கள். பலர் நெருக்கியடித்துக் கொண்டு கிடந்த அறையொன்றுக்குள் என்னையும் தள்ளினார்கள். அங்கே அடைக்கப்பட்டுக் கிடந்தவர்கள் எல்லாம் என்னைப்போல் ரஷியரால் சிறைபிடிக்கப்பட்டவர்கள்தாம். நாங்கள் காத்திருந்தோம் அமைதியாக;—ஒவ்வொருவரும் அச்சம் என்னும் பெருந்தீ வொன்றில் அகப்பட்டுக்கொண்டோராக. பிறகு எங்களை அழைத்தார்கள் ஒருவர் பின் ஒருவராக. என்னை மட்டும் ரஷிய அலுவலர்களிடம் இரண்டு முறை அழைத்துச் சென்றார்கள். கேள்விகள் கேட்டார்கள். அதட்டினார்கள். அச்சுத்தினார்கள். நான் அச்சத்தால் நடுநடுங்கி அழுது தீர்க்கும் வரை என்னை விடவில்லை அவர்கள்.

பிறகு நெருக்கடி நிறைந்த ஊர்தியொன்றுக்குள் என்னை ஏற்றினார்கள். நான்கு படை வீரர்கள் துப்

பதிவு எண். எம். 4642
தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 / இல்லம் ...118
இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

பாக்கியும் கையுமாக காவல் காத்து வந்தார்கள். புடாபெஸ்ட் நகரை வந்தடைந்தோம் நாங்கள்.

அங்கே நான் கைது செய்யப்படுவதற்கான 'வாரண்ட்' ஒன்றும், என் அடையாளச் சீட்டும் என்னிடம் கொடுக்கப்பட்டன. நான் எல்லைப்புறப் படையினரால் திரும்பவும் குடியுரிமை அளிக்கப் பெற்றுவிட்டதாக எழுதப்பட்டிருந்த தாள் ஒன்றில் என்னைக் கையெழுத்திடச் சொன்னார்கள்.

நான் சற்றும் தயங்காமல் கையெழுத்திட்டேன். எதிரிகளுக்குத் தெரியாமலே விநோதமான தவறு ஒன்று எவ்வாறோ நிகழ்ந்துவிட்டிருந்தது. அந்தத்தவறு என்னை விடுதலைப் பறவையாக்கிக் காட்டிற்று. அதை நான் உணர்ந்துகொள்ளச் சிறிது நேரம் பிடித்தது என்னவோ உண்மைதான்.

திகில் எனும் குத்தீட்டி

என் கணவரின் அன்னை வீட்டை நாடிச் சென்றேன் நான். சென்றுகொண்டேயிருந்தேன். திகில் எனும் குத்தீட்டி என்னைச் சுற்றி வளைத்துத் தாக்கிக்கொண்டே வந்தது.

இன்னும் சில விநாடிகளில் என் மகனை நான் காண்பேன். என்னை அடையாளம் கண்டு கொள்வானா அவன்? யாரோ புதியவள் ஒருத்தியென்று என்னை நிராகரித்து ஓடிவிடுவானா அவன்? எனக்கும் அவனை அடையாளம் கண்டுகொள்ள முடியாதே! பெற்ற தாயின் உள்ளுணர்வு என்று சொல்கிறார்களே, அந்த உள்ளுணர்வு எப்படியிருக்கும்? அந்த உள்ளுணர்வை — மெய்யுணர்வைக் கொண்டே ஒருதாய் தன் சேயைக் கண்டுபிடித்து விடுவாள் என்று சொல்கிறார்களே! இயற்கையே! அந்த மெய்யுணர்வும், உள்ளுணர்வும் என் யாட்டும் வந்தெய்தக் கூடாதா? வந்தெய்த வேண்டும்! வந்தெய்த வேண்டும்!

திருப்பம் ஒன்றைக் கடந்து வளைந்து சென்றுகொண்டிருந்தேன் நான். அந்தத் திருப்பத்தருகில் என் மகன் தென்பட்டான்.

பத்துப் பதினைந்து குழந்தைகள் விளக்குக் கம்பம் ஒன்றைச் சுற்றிலும் விளையாடிக் கொண்டிருந்தார்கள். வேறு யாராவது அந்தப் பத்துப் பன்னிரண்டுபேர் மீதும் நாட்டத்தை ஓட்டியிருந்தால், எல்லாரையும் ஒட்டுமொத்தமாகத்தான் அங்கே கண்டிருப்பார்கள். ஆனால் நான்—நான்—ஒரே ஒருவனை மட்டுந்தான் அந்தக் கும்பலிற் கண்டேன்.

நான் என் டாம்மியைக் கண்டேன். கலைந்த தலையோடு நின்றுகொண்டிருந்த என் டாம்மியைக் கண்டேன். எட்டு வருடங்கள் எவ்வளவு விரைவில் ஓடிவிட்டிருந்தன! நான் என் மகனை நோக்கி ஓடத் தொடங்கினேன்.

ஒரு தாய், — ஒரு பெண் — தன் குழந்தையை எட்டாண்டுகள் பிரிந்திருப்பது என்பது எளிதிலே தாங்கிக்கொள்ளக்கூடியதொரு செயல் அல்ல. அந்த நீண்ட இடைவெளி—நெடிய பெருங்காலம்—சின்னஞ்சிறு மனத்திலிருந்து அன்பை அழித்துவிடக் கூடியது; அறிமுகத்தை ஒழித்துவிடக் கூடியது; நினைவை எடுத்துவிடக் கூடியது; நேசத்தை மறக்கடித்துவிடக் கூடியது.

அதனினும் மிகமிகத் துன்பம் நிறைந்தது, துயரம் பெருகியது எது தெரியுமா? நீண்ட நெடுநாட்கள் ஒரு தாய் தன் சேயைக் காண வேண்டும், காணவேண்டும் என்று எண்ணிக்கொண்டு, ஏங்கிக்கொண்டிருந்துவிட்டுக், கடைசியில் அந்தச் சேயைக் கண்ட வேளை, அதுவும் சில கச தூரத்திலேயே பார்த்துவிட்ட சமயம் அச்சம் காரணமாக, அது புரிந்துவிடப் போகும் அலைக்கழிவை நினைத்துக்கொண்டு (தான் பெற்ற சேயைத் தானே கண்டும்) காணாததுபோல் போவதுதான்! (தான் பெற்ற சேயைத் தானே அறிந்தும்) அறியாததுபோல் போவதுதான்.

அந்த மாபெரும் துயரத்தை, அந்த மிகக் கொடும் துன்பத்தை நான் அனுபவித்தேனே! என்னுடைய மகன் டாம்மி சின்னஞ்சிறிய சிசுவாயிருந்தபோது அவனை அங்கேயே விட்டுவிட்டு, என் நாடாம் அங்கேரியிலிருந்து நான் தப்பியோடும் நிலைக்குத் தள்ளப்பட்டேன்.

இப்போது, துயரம் கப்பிய எட்டாண்டுகளையும, பேரிடர் சூழ்ந்து நின்ற எட்டு நாட்களையும் நெட்டித் தள்ளிவிட்டுத் திரும்பவும் புடாபெஸ்டுக்கு வந்து சேர்ந்துள்ளேன். அதோ என் மகன்! அவன் தன் பாட்டியின் வீட்டுக்கு வெளியே விளையாடிக்கொண்டிருக்கிறான். அவனை நான் பார்த்துக்கொண்டேயிருக்கிறேன். அவனிடம் ஓட வேண்டுமென்று என் உள்ளம் அடித்துக்கொள்கிறது. அவனைப் போய்ப் பற்றிக்கொள்ளவேண்டுமென்று என் எண்ணம் துடிக்கிறது.

(அடுத்த இதழில்)

ஏஜண்டுத் தோழர்களுக்கு

ஏஜண்டுகள், தங்களுக்குத் தேவைப்படும் பிரதிகளின் எண்ணிக்கை விபரத்தை, ஒவ்வொருவாரமும் புதன் கிழமைக்குள் தெரிவித்துவிட வேண்டும்.

பொறுப்பாளர்,
"திராவிட நாடு"

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.